அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

அண்ணாவின் அழைப்பு!

இந்தியை எதிர்க்க எல்லோரும் வாரீர்.....!!

கடந்த நான்கு நாட்களாக சென்னையில் கூடிய செயற்குழுவும் பொதுக்குழுவும் இதுவரையில் நடைபெற்றதைப் போலன்றி மிகச் சிறந்த முறையில் நடைபெற்றது. நான்கு நாட்கள்நடைபெற்ற பொதுக்குழுவினுல் களைத்து இருக்கிறேம் என்று சொல்வதிலும் தவறில்லை. இந்தப் பொதுக்குழுவில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் கழகத்தின் நடைமுறைத் திட்டங்களை ஆய்ந்து ஆழ்ந்த கருத்துக்களுடன் மிக விரிவாகப் பேசினுர்கள்!

பொதுக்குழுவில் 121 உறுப்பினர் கலந்து கொண்டதில் 81 தோழர்கள் தமது கருத்துகளை உணர்ச்சியுடன்உற்சாகத்துடன் பொதுக்குழுவில் பேசினுர்கள்.

அந்த தோழர்கள் பேசிய கருத்துகளை நான் திரட்டி, ஒன்றையும் தள்ளாமல், எது எது எப்பொழுது தேவையென்பதைஅறிந்து, ஒன்று, இரண்டு, மூன்று என்று வரிசைப்படுத்தி வகைப்படுத்தி பொதுக்குழுவில் அதை ஏற்றுக் கொள்ளுமாறு செய்தேன். அதில் முக்கியமானதீர்மானமாகியமுதல் தீர்மானத்தைஅன்பழகன் உங்களிடையே எடுத்துரைத்தார்; முதல் தீர்மானமே மொழித் தீர்மானம்தான்!

இந்திஆட்சிமொழியாவதை எதிர்த்து போராட்டம் நடத்த குழு ஒன்று அமைத்துள்ளோம்,அந்தபோராட்டக்குழுவின் தலைவர் கருணுநிதி அவர்கள்பேசுகின்றபொழுது "களத்திற்கு என்னை அனுப்பி அகமகிழ்ந்த தாய்; இந்தி எதிர்ப்பு போராட்டக்குழுவின் தலைவன் நான் என்று சொன்னுல் கட்டியணைத்து தழுவி என்னை ஈன்றெடுத்த அன்னை இல்லாவிட்டாலும் அண்ணு என்கிற தாயார் களத்திற்கு அனுப்பியுள்ள தாயின் அகமகிழ போராட்டத்தைநடத்துவேன்" என்று சொன்னுர்.

நான் அத்தகையவனல்ல; சிறைக் கொடுமைகளை நான் அறிவேன்; சிறைவருத்தும் என்பதும் எனக்குத் தெரியும்.

சட்டமன்றத்திற்கும் பாராளுமன்றத்திற்கும் நகர மன்றத்திற்கும் உங்களை அனுப்ப வேண்டிய நான், மறுபடியும் கஞ்சிச்சட்டி ஏந்த அழைக்கிறேன் என்பதில்நான் மகிழ்ச்சியடையவில்லை; பெருமை கொள்ளவில்லை; பூரிப்படையவில்லை வருத்தப்படுகிறேன்; மிகவும் கவலைப்படுகிறேன்!

அதற்காக கடமையை தட்டிக் கழிக்கவும் விரும்பவில்லை. ஆர அமர யோசித்துதான் இந்த முடிவைஏற்றுள்ளோம். போராட்டத்தை தவிர்க்கும் முடிவல்ல இது!

இந்தியை தீவிரமாக திணிக்கும் செயலில் ஈடுபட்டுள்ள ஆட்சியைக் கண்டித்து அரசியல் அனுபவப்பட்டவர்களும் அறநெறியாளர்களும் இந்தியை எதிர்த்து எவ்வளவோ எச்சரிக்கைகள்விடுத்தும்அதை பொருட்படுத்தாமல் அலட்சியப் படுத்திவிட்டு இருக்கும் ஆட்சி, தன் முடிவை மாற்றிக் கொள்கின்றவரையில், இந்தியை எதிர்த்து, தொடர்ந்து இறுதிவரை எந்தவித கஷ்ட நஷ்டங்கள் வந்தாலும் அதை ஏற்று போராட்டம் நடத்தி களப்பலியாவதை தவிர வேறு மார்க்கமில்லை! போராட்டத்தை உருவாக்க திட்டம் தீட்டிவிட்டேன். அதை உருவாக்கி ஆதரவு தரவேண்டிய உங்கள் பொறுப்பே!

இந்தியை உருவாக்க உருவம் கொடுத்த லால்பகதூர் சாஸ்திரியாரிடம்பேசும்போது எனக்குத் தெரிந்த காரணங்களை காட்டி வாதத்தோடு தீவிரமாகவே கேட்டேன்! நாடு உங்களை வேண்டுகிறது! "திராவிட மக்கள் வேண்டுகிருர்கள், உங்களுடைய முன்னுல் தலைவரும் அரசியல் வித்தகருமான ராசகோபாலாச்சாரியார் சொல்வதையாவதுகேளுங்கள் என்று வாதாடினேன்! அவர் எதையும் பொருட்படுத்தாது இருந்தார், அவருக்கு ஆற்றலும் இருக்கிறது; அதிகாரமும்இருக்கிறது.

அவரின் முன்பே ராஜ்ய சபையில் "இந்தியைத் திணிப்பதால் திராவிடத்தில் கடுமையான போாரட்டம்; தீவிரமான போராட்டம் நடைபெறும் என்று எச்சரித்தேன்! எச்சரிப்பது என்பது அரசியல் வாதிகளுக்குபொழுதுபோக்கு. ஆனுல் எனக்குப் பழக்கமில்லை. என்னை நானே எச்சரித்துக் கொள்வேன்! இதில் ஈடுபடுகிருயே; உன்னுல் அது முடியுமா என்று என்னையே நான் எச்சரித்துக் கொள்வேன்!

ஒரு சில அரசியல்வாதிகளைப் போல் எட்டுதிக்கையும் திரும்பிப் பார்த்து ஒருஎச்சரிக்கை. யார் இத்தப் பக்கம் உன்னை எச்சரிக்கை செய்துள்ளேன். யார் இந்த பக்கம் ஆளில்லையா ...உன்னையும் எச்சரிக்கிறேன் என்று எச்சரிக்கை அரசியல் வாதியுமல்ல நான்!

உங்களின் உள்ளம் அறிந்தவன் நான்; உங்கள் மரபை தெரிந்தவன். மொழி ஆதிக்கத்தை நம்மில் பரம்பரை பரம்பரையாக எதிர்த்து வந்திருக்கிறேம்! உங்களைப்பற்றி நன்ருகஅறிந்தவன்! உங்களின் இதயத்தில் எனக்கு இடமிருக்கிறது. என்ற தைரியத்தில் தான் அந்த மாமன்றத்தில் அவ்வளவு கடுமையாகப் பேசினேனே தவிர விளையாட்டாக அல்ல!

கடுமையான எதிர்ப்பு என்று நான் பேசியதை நினைத்து சிறிது பயந்தேன்.

(2—ம் பக்கம்பார்க்க)



"எதிர்காலம் நமதே! இதில், ஐயமில்லை" - தி.மு.க.

ஆகஸ்டில் போராட்டம்!

நாள் கணக்கில் நடைபெறுவதல்ல!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நானும் கடுமையாக சூளுரைத்ததும் கழகம் கடுமையான முறையில் போர்க்கோலம் கொண்டால் கடுமையாக இருக்கும் என்பதறிந்து தான் சொன்னேன். கழகத்தின் போராட்டத்தைப்பற்றி நான் ஐயப்பாடு கொள்ளவில்லை. கழகத்தின் வலிமையை நான் சந்தேகிப்பவனல்ல,நான் பலகீனமானவன், என்னோடு இருப்பவர்களும் பலகீனமானவர்கள் என்று சந்தேகிக்கவில்லை; போர் ஆர்வமும் தைரியமும் எழுச்சியும் நம்மிடம் ஏராளமுண்டு; ஆனால் அதிலே கொஞ்சம்தான் நாம் இப்போது பயன்படுத்திக்கொள்ள வேண்டும்! சோபியில் கொஞ்சம் பணமிருந்தால் அவனிடம் பாங்கியில் பணம் அதிகம் இருக்க வேண்டும்; பாங்கியில் பணமின்றி சோபியில் பணமிருந்தால் அவன் திவாலாகிவிட்டான். என்றுதான் பொருள்- நம்மிடத்தில் இருக்கக்கூடிய ஆர்வத்தில் ஒரு பகுதியைத்தான் இந்தப் போராட்டத்திற்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இருப்பதையெல்லாம் அவசரப்பட்டு விட்டுவிட்டுமூலபலமின்றிமூர்மார்கெட்டில்உட்காரும் அரசியல்வாதிகளுமல்ல; நாம்பொதுக்குழுவில் 3 நாட்களாகதோழர்கள்கொடுத்ததிட்டங்களும் செயல்முறைகளும் எனக்கே பயத்தை ஏற்படுத்திவிட்டது, ஒரு சிலர் இதைச் செய்யாலாமே! அப்டிச் செய்யலாமேஎன்றுசொன்னார்கள். அதையெல்லாம் அப்படிச் செய்யக்கூடாது. இதை இப்படித்தான் செய்யவேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டதால் மட்டுமல்ல; நம்மின் போராட்டம் அறநெறி வழுவாதிருக்க வேண்டும் என்று எடுத்துச் சொல்லியதில் களைப்படைந்து விட்டேன்.

நம்மிடத்திலே நிரம்ப ஆர்வமிருக்கிறது! ஆர்வம் குறைபடாவண்ணம் ஆகஸ்டு திங்களில் போராட்டம் நடத்த செயல்முறைதிட்டங்களைதீட்ட குழு ஒன்றுநியமித்துள்ளோம். அந்தக் குழுவில் கலைஞர் கருணாநிதியும், என். வி. நடராசனும்—மாவட்ட செயலாளர்களும் அமைப்பாளர்களும் தீவிரமாக இந்தி எதிர்ப்பு போராட்டத்திற்கான திட்டங்களை தீட்டி என்னிடம் தருவார்கள்; நான் போராட்டத்தை துவக்கி வைப்பேன்!

இந்த போராட்டம் வேண்டுமா—வேண்டாமா? என்று வைதீசுவரன் கோயில் ஆருடம் சொல்வதற்கு இந்தக் குழுவை அமைக்கவில்லை, கல்கி அவர்கள் தன் பத்திரிகையில் எழுதினார். "ஒரு காரியம் நடக்க வேண்டுமென்றால்கமிட்டியைப் போடு; இல்லாவிட்டால்அதன் தலையில் கல்லைப் போடு" என்று அப்படிதான்இந்த கமிட்டியும் வேண்டுமாவேண்டாமாஎன்று ஆராய அல்ல எப்படி எப்படி போராட்டத்தை நடத்தலாம்! கல்லக்குடியில் எத்தனை பேர்! நெல்லை மாவட்டத்தில் உயிர் கொடுக்கஎத்தனைபேர்; தஞ்சை மாவட்டத்தில் தியாகம்செய்ய எத்தனை பேர் தயார் என்ற பட்டியலை சேகரித்து இப்படித் தான் போராட்டம் நடத்த வேண்டும் என்று தோழர்களின் ஆசையை அறிந்துஅவர்களின் ஆவலை நிறைவேற்றத் தான் இந்தக் குழுவை நியமித்திருக்கிறேன்!போராட்டம் வேண்டாம் என்பதற்கல்ல; இந்தக்குழுவை அமைத்துள்ளது,

அவசரகால அரசியல்வாதிகள் இதை தப்பாக நினைக்கலாம்! இதைக் கண்டித்து பேசலாம்! நான் முதலில் பேசியது போல் கமிட்டியைப் போடு; இல்லை கல்லைப் போடு" என்று கல்கியில் எழுதியதைவிடஇவர்கள் கண்டித்துப் பேச முடியாது.

போராட்டக்குழுவின் தலைவர் கருணாநிதி கல்லக்குடி போராட்டத்தில் கலந்து எவ்வளவோ சித்ரவதைகளை அனுபவித்தவர்! அவர்தான் இந்தக் குழுவின் தலைவர்! தோழர் என். வி. நடராசன் மேடையதிர உடலெல்லாப் புல்லரிக்கப் பேசியவர் அன்றுகாங்கிரஸ்காரர்; ஆனால் தமிழ் பற்றுள்ளவர்! தமிழ்ப் பற்றுள்ளவர்கள் நீண்டநாள் காங்கிரசில் இருக்க முடியாது. அமைச்சர் களைத் தவிர "நான் கல்லூரியில் படித்த நேரம் என். வி. நடராசன் சத்யமூர்த்தியிடம் இந்தியை எதிர்க்க திட்டம் தீட்டி எடுத்துச் சென்றிருக்கிறார்! சத்யமூர்த்தி வலதுகையில் வாங்கி இடதுகையில் வைத்துக் கொண்டு என்ன என்று அதை பார்க்காது இவரைக் கேட்க, இந்தியை எதிர்க்க என்று இவர் கொல்ல; சரி சரி உட்கார் என்று சத்யமூர்த்தி சொல்ல தன்னின் கோரிக்கைநிறைவேறாதுகண்டு தலை கவிழ்ந்து இவர் வெளியே வர—அந்த நேரத்தில் கணேசன் என்பவர் இவர் கையில் நோட்டீசு ஒன்று கொடுத்தார்! அதில் இன்று மாலை கடற்கரையில் காங்கிரசிலிருந்து விலகிய என். வி. நடராசனும் என்னுடன் பேசுவார் என்றிருந்தது; அன்று வந்தவர் இன்றுவரைபல போராட்டங்களில்ஈடுபட்டுள்ளார்.

உலகம் நாம் நடத்தும் போராட்டத்தை அறியத்தக்க விதத்தில் இந்த போராட்டம் இருக்க வேண்டும்! போராட்டத்தில் மாவட்டச் செயலாளர்களும் அமைப்பாளர்களும் நல்ல பயிற்சியும் பழக்கமும் பெற்றவர்கள்—விபரம் அறிந்தவர்கள்!

போராட்டத்தில் ஈடுபட ஆர்வமும்ஆவேசமும்உள்ளவர்களை நான் தேர்ந்தெடுக்க மாட்டேன்! ஏனெனில் இந்தப் போராட்டம் நீண்டகால நீடித்திருக்க வேண்டிய போராட்டம். இந்தப் போராட்டத்தில் வீரஉணர்ச்சி உள்ளவர்களும் அலசரப்படாமல் நீண்டகாலச் சிறைக்கு கஷ்டநஷ்டங்களுக்கு உள்ளவர்களுக்கு தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்!

நீங்கள் எல்லோரும்சிறைக்கு வரவேண்டும் என்றல்ல; ஆர்வம் உள்ளவர்கள் வெளியில் இருந்துகொண்டே பிரச்சாரம் செய்யலாம்! தங்களால்முடிந்த உதவிகளை கழகத்திற்கு தரலாம்!

"ஆர்வத்தோடும் உணர்ச்சியோடும் நீங்கள் வந்தேன்; வந்தேன் என்று சொல்ல, நான் எங்கே எங்கே என்று கேட்க மறுநாள் நான் சென்றேன்!சென்றேன்என்று சொல்லக்கூடியவர்கள் எனக்குத் தேவை இல்லை"

வெள்ளிக்கிழமை சிறைச் சென்று புதன்கிழமை எண்ணெய் தேய்த்துக் கொள்ள வீட்டுக்கு வரலாம் என்று தப்புக் கணக்குப் போட்டு விடாதீர்கள்" நாள் கணக்கில் நடைபெறும்போராட்டமல்ல; மாதக்கணக்கில் முடியும் போராட்டமல்ல;வருடக்கணக்கில் நடைபெறும் நீங்காத கடுமையான போராட்டம்!

(6-ம் பக்கம் பார்க்க)

இந்தியின் அவசியமென்ன?

ஒவ்வெருவரும் ஆங்கிலம் கற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லையெனக் கூறப்படுகிறது. அது போலவே ஒவ்வொருவரும் இந்தி கற்றுகொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

தென்னிந்திய மொழிகளைக் கற்றுக்கொள்வதற்கு வட இந்தியர்கள் அதிகமாக முன் வருவதில்லை. கன்னடம் மலையாளம், தெலுங்கு அல்லது தமிழ் ஆகியன ஆட்சிமொழியாக இல்லாமலிருக்கலாம். ஆனால், அவைகளின் இலக்கிய வளற்திலிருந்து வட இந்திய மொழிகள் தெரிந்துகொள்ள வேண்டியவை நிறைய இருக்கின்றன.

ஒரே மாநிலத்தில் பல மொழிகள் பயில்வது நல்லது! உதாரணமாக சென்னையில் தெலுங்கையும், செகந்தராபாத் அல்லது பெங்களூரில் தமிழையும் சொல்லிக் கொடுக்கலாம்!

இந்தி இன்னும் முழுமை அடையவில்லை. பேசும் இந்திக்கு எழுதும் இந்திக்கும் அதிக வேறுபாடு இருக்கிறது. இந்த பேதம் இப்போதுதான் அதிகமாகிலருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு வரை டெல்லியில் இந்தி—இந்துஸ்தானியைத் தான் பேசி வந்தார்கள். ஆனால் அதிலுள்ள பார்சிய மொழிச் சொற்களையும், அராபிய மொழிச் சொற்களையும் நீக்கிவிட ஆயத்தம் நடக்கிறது. அந்தச் சொற்களுக்கு பதிலாக சமஸ்கிருதச் செரற்களை நுழைக்கய் பார்க்கிறார்கள்.

—மத்திய அமைச்சர் கோபால ரெட்டி

அரசியல் நிர்ணய சபை நிகழ்ச்சி:

எமக்குக் கூழாங்கற்களா !

இந்திக்காரர்களுக்கு எச்சரிக்கை

அடக்கியாள நினையாதீர்!

அன்று எழும்பிய நாதம்!

அரசியல் நிர்ணய சபையில் 1945-ல் இந்தி நகல் வந்தபோது டி. ஏ. ராமலிங்கம் செட்டியார் எழுப்பிய முழக்கத்தின் பிற்பகுதி, கீழே தரப்படுகிறது.

அடுத்த கிழமை, துர்க்காபாய் தேஷ்முக் பேசிய பேச்சு தரப்படும். (ஆ-ர்)

(கடந்த வாரத் தொடர்ச்சி)

...இந்தியாவின் தலைநகரம் பற்றிய பிரச்சினை மிக மிக முக்கியமானது என்று நான் அடிக்கடி சொல்லி வருகிறேன். நான் இப்படிசொல்வதைக் கேட்டு சிரிக்கக்கூடும். ஆனால், இது மிகவும் முக்கியமானதாகும். இரண்டாயிரம் மைல்களுக்கப்பாலிருந்து ஒருவன் இங்கு டில்லி வந்துக் காரியங்களைக் கவனிக்கும் போது தன்னுடைய சொந்த நாட்டில் இல்லாதது போன்ற ஒரு உணர்வு அவனுக்கு இயற்கையாகவே ஏற்படுகிறது. முன்பின் அறிமுகமில்லாத ஒரு இடத்துக்குவந்திருக்கிறோமோ என்ற எண்ணம்தான் அவனுக்கு ஏற்படுகிறது!

டில்லியின் சமூக வாழ்க்கையில் எத்தனை மதராசிகளுக்கு பங்கு இருக்கிறது என அறிய விரும்புகிறேன்நானும்இரண்டு மூன்று ஆண்டுக்காலமாய் இங்கு இருக்கிறேன். ஆனால், எனக்கு உத்திரப்பிரதேசம், டில்லியிலுள்ள ஒருசிலபேரைத்தான் தெரியும். இதுதான் இருக்கின்ற ஒரு நிலைமை. எல்லோருக்கும் பொதுவான ஒரு தலைநகர், உத்திரப்பிரதேசத்தாரும் பஞ்சாபிலுள்ளவர்களும் தங்களுடைய இடம் என்று கருத முடியாதபடி தென்னாட்டாருக்கும் பொதுவாகயிருக்கக்கூடிய இடத்தில், அமைந்தாலொழியப் புதிய இடத்துக்குப்போய்வருகிறோம் என்றே தென்னாட்டவர் எண்ணுவார்கள். மதராசிகள் இங்கே பதவிகளில் இல்லையா என்று முன்பொருமுறை கேட்கப்பட்டது. அப்படிக் கேட்பதன்பொருள்என்ன?

தேசீயம் என்கிறோமே, எல்லாம் ஒருதேசீயம்என்கிற எண்ணமிருக்குமாயின்,இந்தக்கேள்வியே எழும்புமா?இதுதேசீயத்தையா காட்டுகிறது? பஞ்சாபியரும் உத்திரப் பிரதேசத்தாரும் டில்லியில் பதவிகளில் இருக்கும்போது ஏன் மதராசிகள் மட்டும் இருக்கக்கூடாது? எல்லோரும் ஒரே தேசத்தவர் தானே. இருந்தும் ஏன் 'மதராசி'கள் என்கிற பேச்சு வர வேண்டும்? கடந்த இரண்டு ஆண்டுகளில் நாம் எவ்வளவோ முன்னேறியிருக்கிறோம் என்றீர்களே! அதற்குக் காரணம்பதவியிலிருக்கிற அவர்கள் பட்ட பாடல்லவா? தலைவர் அவர்களே! இப்படிப்பட்ட பேச்சுகள், இந்தியாவின் ஒற்றுமையையா உண்டு பண்ணும்.

தலைநகரம், அங்கே அதிகாரிகள் இருப்பது ஆகியவைகளைவிட முக்கியமான பிரச்சினையாகும் மொழிப்பிரச்சினை. நீங்களாகவே முடிவு செய்து ஏதாவது ஒன்றை திணித்துவிட்டு அல்லது அப்படித்திணிக்கிறோம் என்பது போன்ற எண்ணம் ஏற்படும்படி மற்றவர்களுக்கு உண்டாக்கிவிட்டு—— அது உண்மையாயிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி— இங்கு சிலர் சொன்னதுபோல அதுதான் நடக்கும் என்று கருதிக்கொண்டு செய்வீர்களானால்,தெற்கின்மீதுவடக்கு ஆதிக்கம் செலுத்துகிறது, என்கிற கருத்து வளரும்படி நடப்பீர்களேயானால், அதன் விளைவுகள் மிக மிக மோசமாகும். வடக்கிலிருக்கிற எனதருமை நண்பர்களுக்கு அதன் விளைவுகள்கெடுதலாக முடியும், வடக்குக்கு எதிர்ப்பாக செல்லும் என்று மட்டும் குறிப்பாக சொல்ல விரும்புகிறேன். ஒரே நாடாக, ஒன்றுபட்டு வாழ வேண்டுமானல் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ வேண்டுமே ஒழிய ஒருவர் இன்னொருவர் மீது விரும்பியோ, விரும்பாமலோ ஒன்றைத் திணிப்பது என்கிற போக்குக் கூடாது.

அப்படித்தான், இப்போது தென்னாட்டவராகிா நாங்கள் என்ன கேட்கிறோம்? கொஞ்சம் காலதவணைகேட்கிறோம்.இந்தி மொழியைஏற்க நாங்கள் தயாராவதற்குத் தவணை கேட்கிறோம். இதனை அந்தப் பக்கமிருக்கும் தலைவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.பதினைந்தாண்டுக்காலம் தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், சபைமுன் வைக்கப்பட்டிருக்கிற நகல் என்ன சொல்கிறது? முதல் பிரிவில், பதினைந்தாண்டுக்காலத்துக்கு தொடர்ந்து இங்கிலீஷ் இருக்கும் என்று சொல்கிறது.

இரண்டாவது பிரிவில், ஐந்தாண்டுகள் கழித்ததும், ஒரு கமிஷனோ அல்லதுகமிட்டியோ போடப்படும், அது எந்தெந்த காரியங்களுக்கு இந்தியைப் பயன்படுத்தலாம் என்று முடிவு செய்து குடியரசுத் தலைவருக்கு யோசனைகூறும்,அந்தயோசனைகளின் மீது தலைவர் உத்திரவு போடுவார்என்று சொல்கிறது. இதன் பொருள் என்ன? பதினைந்தாண்டுக் காலம் என்கிற தவணை ஐந்தாண்டுகளாக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகுப் பத்தாண்டுகளானதும் இன்னொரு கமிஷனை நியமிப்போம், அதன் சிபார்சுகளையொட்டி உத்திரவுகள்போடப்படும் என்கிறீர்கள். என்ன அர்த்தம் இதற்கு? பதினைந்தாண்டுகள் தவணைதருகிறோம் என்று சொல்லிவிட்டு அதே சமயம், ஐந்தாண்டுகள், பத்தாண்டுகள் கழித்து நீங்கள் இந்தியைக் கொண்டுவரப்போகிறீர்கள். சர்க்காரில் நிர்வாகத்தில், உத்தியோகங்களில், சட்டசபையில், எங்கும் இந்தி தெரியாத எங்களைப் போன்றவர்கள் இந்தி மொழியில் பக்குவத்தைப் பெறுமலிருக்கும்போதே இந்தியைக் கொண்டு வருவோம் என்கிறீர்கள்.முதல் பிரிவில் நம்பிக்கை அளிக்கிறீர்கள்! அடுத்த பிரிவில் அறவே அந்நம்பிக்கையை மறுத்து வெறும் கூழாங்கற்களைத்தான் கொடுக்கிறீர்கள்!

யார் இந்த நகலைத் தயாரித்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. திரு: கோபாலசாமிஅய்யங்கார் நகலைப் பிரேரேபிக்கமுன்வந்தார் என்பதை நாம்அறிவோம்.பதினைந்தாண்டுகள் என்று கொடுக்கப்பட்ட தவணை முடிவதற்குள்ளாக இந்தியை நுழைப்பது என்கிற யோசனையை என்னால் ஏற்க முடியாது. கமிட்டி, கமிஷன் என்றெல்லாம் சொல்லி ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, பத்தாண்டுகளுக்குப் பிறகு இந்தியை நுழைப்பது பயங்கரமாகும். தெற்கிலுள்ள எங்களுக்கு இதுதான் கவலையைத் தருகிறது.

இந்தியாலுள்ளஏனைய மாநிலங்களைப் போல, அவைகளோடு சரிசமமாக ஒட்டி நிற்கக்கூடிய நிலையில் இல்லாத ஒரு பகுதி எங்களுடைய தெற்காகும். அதிலும் குறிப்பாக தமிழ்பேசப்படுகிற என்னுடைய பகுதி சீக்கிரம் அந்த நிலைமையை அடைய முடியாது.

(10-ம் பக்கம்பார்க்க)

81 பேர், பேசினர்!!

மொத்தம் 135 பேருள்ள பொதுக்குழுவில் வந்திருந்த 121 பேரில் 81 பேர் விவாதத்தில் பங்கு கொண்டனர்! இதனைக் குறிப்பிட்டுப் பேசிய அறிஞர் அண்ணா, "நாட்டுப் பிரச்சினையில் நமக்குள்ள அக்கறையையும், சிரத்தையையும் இந்தப் பயனுள்ள விவாதம் காட்டுகிறது", என்றார்.

கழகத்தின் காவலர்கள் கூடி கண்ட முடிவுகள்!

சூன் திங்கள் 8, 9, 10 ஆகிய நாட்களில், சென்னை லாயிட்ஸ் ரோடு 155-ஆம் எண் கட்டிடத்தில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுவில் முடிவு செய்யப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:—

தீர்மானம்—1

அனுதாபம்

'இந்திய குடியரசின் முன்னுள் தலைவர் டாக்டர் இராசேந்திரபிரசாத், பொதுவுடைமைக் கட்சித் தோழர் ப. ஜீவானந்தம் தி. மு. கழகப் பொதுக்குழு உறுப்பினர், தோழர் அ. சு. சி. பொன்னுசாமி, நெல்லை மாவட்ட தி. மு. கழக அவைத்தலைவர் தோழர் திருவடி முத்து, கழகப் பொருளாளர் தோழர் மு. கருணாநிதி அவர்கள் அன்னையார் திருமதி. அஞ்சுகம் அம்மையார், கழகச் செயற்குழு உறுப்பினர் தோழர். டி.கே.சீனுவாசன் அவர்கள் அன்னையார் திருமதி ஆனந்தவல்லி அம்மையார் ஆகியோர் மறைவுக்கு இப்பொதுக்குழு தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரவர்கள் குடும்பத்திற்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

—தலைவர்

தீர்மானம்—2

மத்திய அரசின் வரிக் கொள்கைக்குக் கண்டனம்

"மத்திய அரசின் மறைமுக வரிகளின் அளவு ஆண்டு தோறும் பெருகிக் கொண்டு போவதையும், அதிலும் குறிப்பாக நடைமுறை ஆண்டு வரவு செலவு திட்டத்தில் போடப்பட்ட மறைமுக வரிகள் நடுத்தர ஏழை மக்களால் தாங்க முடியாததாகவும், விலைவாசிகளை மேலும் உயர்த்துவதாகவும் அமைந்துள்ளதைக் கண்டு இப்பொதுக்குழு தனது பலமான கண்டனத்தை தெரிவிப்பதுடன், வரி பளுவைத் தாங்கக்கூடியவர்கள் ஏற்குமாறு பகிர்ந்தும், நேர்முக வரிகளைச் சரியானப்படி விதித்து வசூலித்தும், ஏழை எளியவர்கள், நடுத்தர வகுப்பார் சிறு தொழில் புரிவோர் மீது சுமத்தப்படும் வரிப்பளுவைக் குறைக்க வேண்டுமென அரசாங்கத்தை வற்புறுத்துகிறது.

முன்: என். வி. நடராசன்
வழி: டி. கே. பொன்னுவேலு

தீர்மானம்—3

கட்டாய சேமிப்பு

"அண்மையில் கொண்டு வரப்பட்டுள்ள கட்டாய சேமிப்பு திட்டமானது, குறைந்த வருமானமுள்ளவர்களை, அவர்களது வாழ்க்கைத் தேவைகளைக் கூட நிறைவேற்றிக் கொள்ள முடியாதபடி கடுமையாகப் பாதிக்கின்ற காரணத்தால், ரூ. 5,000—வரை ஆண்டு வருமானம் உள்ளவர்களும் அதற்கு ஈடான வருமானம் தரக்கூடிய நிலம் உள்ளவர்களும் இந்தக் கட்டாய சேமிப்பு திட்டத்தினுல் பாதிக்கப்படாத வகையில், அதற்கு மேற்பட்ட வருமானக் கட்டங்களில், படிப்படியாகச் சேமிப்பு விகிதத்தைஉயர்த்திக்கொண்டு,குறைந்த வருமானமுள்ளவர்கள் (பஞ்சாலைத் தொழிலாளர் போன்ருேர்) இந்தக் கட்டாய சேமிப்புக்கு உட்படாமல் விலக்கப்பட வேண்டுமென அரசாங்கத்தை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

முன்: அரங்கண்ணல்
வழி: டி. கே. சீனுவாசன்
வழி: சு. துரைசாமி

தீர்மானம்—4

தங்கக் கட்டுப்பாடு

"அண்மையில் கொண்டுவரப்பட்டுள்ள தங்கக் கட்டுப்பாடு சட்டதால் பல்வேறு தீய விளைவுகள் தோன்றியிருப்பதாலும், தங்கக் கள்ளக் கடத்தலைத் தடுத்து நிறுத்த இயலவில்லையாதலாலும், அதற்கேற்ப சட்டத்தைத் திருத்தி அமைத்துத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இப்பொதுக்குழு அரசினரை வற்புறுத்துகிறது.

தங்கத்தின் தரத்தைக் கட்டுப்படுத்தாமல், தனிப்பட்டவர்கள் வைத்துக் கொள்ளக் கூடிய தங்கத்தின் அளவை மட்டுமே கட்டுப்படுத்தித் தங்கக் கள்ளக்கடத்தலைத் தடுத்து நிறுத்த கடுமையான நடவடிக்கை எடுத்து. வேலையிழந்து தவிக்கும் இலட்சக்கணக்கான பொற்கொல்லர்கள், நகைத் தொழிலாளர்கள் ஆகியோரின் துயரைத் தீர்க்கும் வகையில் இலவச லைசன்சு வழங்குதல், கடன் தருதல். தங்கத்தை வழங்குதல் திட்டத்தை மேற்கொள்ள அரசினர் உடனடியாக முன்வர வேண்டுமென்று இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

தங்கக் கட்டுப்பாடு உத்தரவினுல் வேலையிழந்து தவிக்கும் பொற்கொல்லர்களுக்கு வேறு வேலை தேடித்தரவும், அவர்களது அவலநிலை நீக்கப்படவும் திட்டமிட்ட நடவடிக்கைகளையும் அரசினர் மேற்கொள்ள வேண்டுமென்றும் இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

முன்: நீல நாராயணன்
வழி: ஈ. ஆர். கிருஷ்ணன்

தீர்மானம்—5

கல்வித்திட்டம்

"தமிழ் நாடு, அரசினர் கல்வித் திட்டத்தைஅடிக்கடிமாற்றி அமைப்பதால் ஏற்படும் குழப்பத்தையும் சிக்கலையும் நீக்கும் வகையில், நிரந்தரமாக ஒரு நல்ல திட்டத்தைக் கல்வித்துறை விற்பன்னர்களைக் கலந்தாலோசித்து, ஆராய்ந்து, ஏற்று, செயல்படுத்த முயற்சிக்க வேண்டுமென இப்பொதுக்குழு கருதுகிறது

கல்வித் திட்டத்தில் மும்மொழிக் கொள்கையின்படி தமிழ் நாட்டுக் குழந்தைகள் மூன்றுமொழி படிக்கும் சுமை கட்டாயமாக்கப்படுவதையும், இந்தி—விருப்ப மொழியாகப்படிக்கப்படலாம் என்று கூறப்படினும், கட்டாயமாகக் கற்பிக்கப்படும் நிலை இருப்பதையும் இப்பொதுக்குழு கண்டிக்கிறது.

தமிழ்நாட்டு மாணவர்கட்கு,இந்தித் தேர்வு அவசியமில்லை என்று அறிவித்த கல்வி அமைச்சர் அவர்கள்'மத்திய அரசின் விருப்பத்தை யொட்டி மறுபடியும் இந்தித் தேர்வைப் புகுத்தியிருப்பது அநீதியானது என்பதுடன்,இந்தித் தேர்வில் பெறுகிற தகுதி எண்களின் மிகுதியை,மற்றப் பாடங்களில் குறையும் எண்களுக்கு ஈடுகட்டவும் ஏற்கப்படும் என்று அமைச்சர் அறிவித்திருப்பது கல்வித்தரத்தைக்குறைப்பதற்கும், அநீதி விளைவதற்கும் வழிசெய்வதால்,இந்தியைத் தேர்வுக்குரிய பாடமாகக் கொள்ளாமல் விலக்க வேண்டுமெனவும் எக்காரணத்தை முன்னிட்டும்' அதில் பெறும் தகுதி எண் ஈடுகட்டுவதற்கு அனுமதிக்கப்படக் கூடாதெனவும் இப்பொதுக்குழு வற்புறுத்துகிறது.

தமிழ்நாடு அரசினர் முன்னர் அறிவித்திருந்தபடி, கல்லூரிகளில் பட்டப் படிப்பு வகுப்பு உட்பட கலையியல் பாடங்களையும், 1963-இல்இருந்து தமிழ்மொழி மூலம்பயிற்றுவிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் அந்த முயற்சியும்நோக்கமும் சிதையும் வகையில் அதைக் குறைவுடையதாகக் கூறி, ஆங்கிலத்திலேயே கலையியல் பாடங்களையும் பயிற்றுவிப்பதை நீடிக்க முடிவுசெய்திருக்கும் செயல்கண்டு, இப்பொதுக்குழு வன்மையாக கண்டிப்பதுடன், விரைவில் அனைத்துத் துறை கல்வியும் தமிழிலேயே பயிற்றுவிக்கப்பட வேண்டுமென்று இப்பொதுக்குழு வற்புறுத்துகிறது.

முன்: செல்வராசு
வழி: கமலநாதன்

தீர்மானம்—6

சட்ட மன்றத் தொகுதிகளைத் 273 ஆக உயர்த்தக் கோரிக்கை

"தற்போதுள்ள தமிழ் நாடு சட்டமன்றத் தொகுதிகள்206 என்ற அளவில் மக்களது குறைகளையும் தேவைகளையும் முழு அளவிலும் அழுத்தந்திருத்தமாக பிரதிபலிக்கக் கூடிய நிலை இல்லாததாலும், தொகுதிகள் சீரானதாகவும், கச்சிதமாகவும், ஒரே மாதிரியான நிலையில் இருக்கவேண்டும் என்ற அடிப்படையிலும், சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களிடத்தே நெருங்கித் தொடர்பு கொள்ள வாய்ப்பளிக்கும் வகையிலும், ஏற்கனவே அமுலிலிருந்து வரும் முறையில் தமிழ் நாட்டை விட மக்கள் எண்ணிக்கையில் குறைவாக உள்ள மாநிலங்கள் அதிகமான

(9-ம் பக்கம் பார்க்க)

கவனிக்க

'அறப்போர், சம்மந் தமாக கடிதம் எழுது வோர், 'நிர்வாகி, அறப் போர், 9. ஏ. டாக்டர் சி. பி. ஆர். ரோடு, சென்னை-18.' என்ற முகவரிக்கு எழுதுக.

அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

சந்தா விவரம்

உள்நாடு
ஆண்டு சந்தா 8—00
6 மாத சந்தா 4—50
வெளிநாடு
ஆண்டு சந்தா 9—00
6 மாத சந்தா 5—00

ஒளி - 3 | 13-6-'63 வெள்ளி | கதிர் - 14

★ இந்தி எதிர்ப்புப்போராட்டக்குழு ★

"தனித்தனி தன்மையும், தனித்து இயங்கும் ஆற்றலும் பெற்ற பல்வேறு மொழிகளையும், பல்வேறு நாகரிகப் பண்பாடுடைய இன மக்களையும் கொண்டு பல மாநில அரசுகளின் இணைப்பு அமைப்பாக உள்ள இந்தியத் துணைக் கண்டத்தின் மத்திய ஆட்சிக்கு இந்தியாவின் தேசிய மொழிகள் அனைத்தும் ஆட்சி மொழிகளாகும் உரிமையும் நியாயமும் தகுதியும் பெற்றிருந்தும் கூட,

ஸ்விட்சர்லாந்து கானடா போன்ற பல நாடுகளிலே (மக்களிடையே) நிலையான வேற்றுமைகள் இந்தியாவில் உள்ள அளவுக்கு இல்லாத போதும். மிகச்சிறிய எண்ணிக்கை உள்ள சிறுபான்மையினர் பேசும் மொழி உட்பட, மூன்று நான்கு மொழிகள், ஆட்சி மொழிகளாக (ஏற்கப்பட்டு) அமைந்து, ஜனநாயக நெறி நடந்து வருவது கண்டும்,

"ஒரே மத்திய ஆட்சி மொழி" என்ற தவருன அடிப்படையில், இந்தியாவில் உள்ள மக்களில் ஒரு சிறுபான்மையினர் மீதும் மொத்தத்தில் பெரும்பான்மையினர் மீதும் திணிக்கும் வகையில்,

பெருத்த மாறுபாட்டுக்கிடையில் இந்தி மொழியை ஆட்சிமொழியென அரசியல் சட்டத்தில் நுழைத்து வைத்துக் கொண்டு, அதை நடை முறைபடுத்த சூழ்ச்சிகளும், சதிகளும், அரசினரால் கையாளப்பட்டு வருவது கண்டு, இப்பொதுக் குழு, மொழி உரிமையை இழந்து வரும் இந்தி மொழியினரல்லாத மக்களின்—குறிப்பாக திராவிட மக்களின் சார்பில், தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவிக்கிறது.

பல ஆண்டுகளாகத் தென்னகத்து மக்களும் மற்ற இந்தி பேசாத பகுதியினரும், இந்தி மொழி ஆட்சி மொழியாவதை ஏற்காமல் மறுத்து வந்தும், தமிழகத்தில் பல இந்தி திணிப்பு கண்டனக் கிளர்ச்சிகள் நடைபெற்று வந்தும், கழகம் பல கட்டங்களில் இந்தித் திணிப்பைக் கடுமையாக எதிர்த்து வந்ததின் விளைவாகவும், பிரதமர் நேரு, அவர்கள், இந்தி பேசாத மக்களின் இசைவினை பெருமல், இந்தி மொழி ஒரு போதும் ஆட்சிமொழி ஆக்கப்பட்டுவிட மாட்டாது எனவும், ஆங்கிலம் அகற்றப்பட மாட்டாது எனவும்" பாராளு மன்றத்திலும் பல கட்டங்களில், அரசாங்க சார்பில் உறுதிமொழி தந்திருந்துங்கூட,

இந்தி பேசாத மக்களின் ஆட்சிமொழி உரிமைகளைக் காக்கவும், ஒரு வட்டார மொழிக்கு மட்டும் தனிச் சலுகையும் ஆதிக்கமும் தரப்படாமலிருக்கவும், பிரதம மந்திரியின் வாக்குறுதி முழுமையாக நிறைவேற்றப்படவும், அரசியல் சட்டத்தில் உள்ள—ஆட்சிமொழி பற்றி உள்ள பிரிவு திருத்தப்பட்டிருக்க வேண்டியது அவசியமாக இருக்க,

அதற்கு மாருக, அண்மையில் நிறைவேற்றப்பட்டுவிட்ட ஆட்சிமொழிகள் மசோதாவின் மூலம். 1965-ல் இந்தியை ஆட்சி மொழி ஆக்கி விடவும், ஆங்கிலத்தை ஒதுக்கி விடவும், செய்யப்பட்டுள்ள அக்கிரமத்தை இப்பொதுக்குழு மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்நிலையில் மாநில ஆட்சிமொழியாக இருப்பதும், திராவிட மொழிகளில் தலையாயதுமான தமிழையும், மத்திய ஆட்சி மொழியாக ஏற்க வேண்டுமென்று வற்புறுத்துவதுடன், அதை ஒப்ப மாநில ஆட்சி மொழிகளாகி உள்ள மொழிகளையெல்லாம் மத்திய ஆட்சிமொழிகளாக ஏற்றுக் கொள்ளும் வரை ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சிமொழியாக இருந்து வரவேண்டுமென்று இப்பொதுக்குழு வற்புறுத்துகிறது.

ஆட்சிமொழிகள் மசோதாவும். அரசாங்க உத்திரவுகளும் திட்டங்களும் இந்தித் திணிப்பை தீவிரப் படுத்துகின்றகாரணத்தால், நமது மொழி உரிமைகளைக் காக்கவும், இந்தி ஆதிக்க ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்தவும், நம்மை இரண்டாந்தர குடிமக்களாக்கும் சூழ்ச்சியை எதிர்த்து ஒழிக்கவும், தென்னக மக்களின் உரிமையை நிலைநாட்டவும், தி மு. கழகம், நேரடிப் போராட்டத்தைத் துவக்கி நடத்த வேண்டுமென இப்பொதுக் குழு முடிவெடுக்கிறது.

இதற்கென தோழர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில், என். வி. நடராசன் அவர்களும், மாவட்ட செயலாளர்களும், மாநில அமைப்பாளர்களும் கொண்ட ஒரு போராட்டக் குழுவை இப்பொதுக்குழு அமைக்கிறது.

இக்குழு, உடனடியாக வட்டார மாவட்ட அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு, ஆகஸ்டுத் திங்களில், போராட்டத்திட்டம் வகுத்துப் பொதுச் செயலாளர் அவர்களிடம் தருவது எனவும். அதன் பேரில் பொதுச் செயலாளர் அவர்கள் போராட்டத்தை துவக்கி வைப்பதெனவும், இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

உலகப் பொதுமொழி

ஆங்கிலத்தின் மூலம்தாம் நாட்டை ஒற்றுமைப் படுத்த முடியும். அறிவுத் துறையில் முன்னேற்றமும் நல்ல சிந்தனையும் ஏற்பட வேண்டுமானல், நீக்கப்பட்ட அல்லது நீக்கப்பட்டு வரும் இடங்களில் எல்லாம் மீண்டும் ஆங்கிலம் இடம் பெறச் செய்ய வேண்டும்.

ஆங்கிலம் நீடிக்க வேண்டுமென்பதற்கும் சில காரணங்கள் உண்டு. முதலாவதாக, இந்திய வாழ்க்கையில் அதன் சகல துறைகளிலும், [redacted]ங்கிலம் ஒரு நிலையான இடங்தை அடைந்துள்ளது. இரண்டாவதாக, பிரிட்டிஷ் ஆட்சியின்போது ஏற்பட்ட தேசிய ஐக்கியத்தை ஆங்கிலம் மூலமே பேணிப் பாதுகாலக முடியும். மூன்ருவதாக, இந்தியாவில் ஆங்கிலத்துக்குத் தேவை உள்ளது. பொதுவான நவீன இந்தியமொழி இந்தியாவில் இல்லை. ஆங்கிலம் நடுநிலை மொழி, ஒரு குறிப்பிட்ட குழுவுக்கு அது தனிச் சலுகை எதையும் கொடுக்கவில்லை. அறிவியல், தொழில் நுணுக்கம், மற்றும் இதர துறைகளில் நவீன அறிவைப்பெற இந்தியர்களுக்கு ஆங்கிலம், மேலும் உலக நாகரிகத்திற்குப் பொதுமொழியாகவும் ஆங்கிலம் விளங்குகிறது.

டாக்டர் சுனித்குமார் சாட்டர்ஜி

தாய்மொழி காக்க தணியாத போர்! மீண்டும் உங்களை அழைக்கிறேன்! உல்லாசபுரிக்கல்ல!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மனைவியை மூன்று மாத கர்ப்பிணியாக விட்டு விட்டு வந்தால், திரும்பிச் சென்றால் ஆறுமாதகுழந்தையாகதொட்டிலிலே தவழும் என்ற தவறான கணக்குப் போட்டுவர வேண்டாம். இந்தப் போராட்டம் இங்கே துவங்கி அங்கே போய் முடியும் போராட்டமுமல்ல; இது தொடர்ந்துநடத்தவிருக்கும் போராட்டம்.

இதில் பண்டித நேரு அண்ணாத்துரையை தோற்கடிக்க வேண்டும் என்று கருதி இந்தி திணிப்பு கைவிடப்பட்டது என்று சட்டம் நிறைவேற்றினாலொழிய—போராட்டம் நிறுத்தப்படாது. அதுவரை நடைபெறும் போராட்டம் சாமான்யமானதல்ல.

இந்தி பேசாத மக்களின்மீது இந்தியை நுழைப்பது புதிய ஆதிக்கத்தை ஏற்படுத்தி நம்மை நான்காம்தர மக்களாக்க விரும்புகிறது மத்திய ஆட்சியென்று ராஜகோபாலாச்சாரியாரும் சொல்கிறார். பண்டிதர் நேரு இந்தி பேசாத மக்கள் விரும்புகிறவரை ஆங்கிலம் காலவரையரையின்றி நீடிக்கும் என்று கூறினார்; இந்தி பேசாத மக்கள் இந்தியை விரும்பவே இல்லை என்கின்றபொழுது ஆட்சியில் இந்தியை திணிப்பது அநாகரீகமானதுமட்டுமல்ல; ஏகாதிபத்ய ஆணவத்திமிர் ஆகும்!

சென்னை மாநிலத்தின் நிதியமைச்சராக இருக்கும்பக்தவத்சலனார் இங்கிருந்தபடி அறிக்கை ஒன்றை வெளியிட்டார்! அதை லால்பகதூர்சாஸ்திரியார் கையிலெடுத்துக் கொண்டு சம்மட்டியால் எங்கள் தலையில் அடிப்பதுபோல் பேசினார்; உங்கள் மந்திரியே அறிக்கை வெளியிட்டுள்ளார்.

மந்திரியேஆட்சிமொழிமசோதாவை ஆதரித்து அறிக்கை விட்டுள்ளார்! தென்னகமொழி பிரச்னைக்கு ஆதரவு தருகிறது! மந்திரி என்றால் தென்னகம் என்று தவறாக மந்திரி கணக்கிட்டுள்ளார்.

மாநில ஆட்சிமொழியாக எங்கள் தலையாய தமிழ் மொழியே இருக்க வேண்டும். மத்ய ஆட்சி தமிழை ஆட்சி மொழியாக ஏற்கின்றவரை தொடர்புகொள்ள ஆங்கிலமே போதும். திராவிடம் மராட்டியரோடு தொடர்புகொள்ள, வங்காளி — ஆந்திரர்களோடு தொடர்பெற இணைப்புமொழியாக ஆங்கிலமே இருக்கட்டும்.

"எத்தனை காலத்திற்குள் எவ்வளவு விரைவில் தமிழை ஆட்சிமொழியாக மத்யஅரசு ஏற்கும்வரையில் ஆங்கிலமே இணைப்புமொழியாக இருக்கட்டும்! ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக்க விரும்பவில்லை; ஆங்கிலம் ஓர் இணைப்புமொழி! தமிழ்தான் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும்!

யாரோசிலர் அண்ணாத்துரை ஆங்கிலத்தின் காலடியில் வீழ்ந்து விட்டார்! என்று பேசினார்களாம். தமிழோடு எத்தனை நாள் இவர்களுக்கு தொடர்பு என்றே தெரியவில்லை. ஆங்கிலமொழியின் திறனை இவர்கள் அறிந்தவர்களல்ல; ஆங்கிலத்தை எதிர்ப்பதாக கூறுகிறார்கள்.

சட்டித்தூக்கியபரதேசிபட்டுபீதாம்பரத்தை விட்டு விடுகிறேன் என்று சொல்வதுபோல் பேசுவது விநோதமாக இருக்கிறது. சட்டி தூக்கும் பரதேசியிடம் பட்டுபீதாம்பரம் ஏது?

சமையற்காரன் வைத்து சமைத்துச் சாப்பிட்டவனுக்கு திருமணம் முடிந்து இனிமையாகபேசி சுவையான உணவுகளை பரிமாறும் மனைவி வந்தவுடன் சமையற்காரன் அவனுக்கு தேவையில்லை; அதைப் போல் ஆங்கிலம் என்ற பட்லரின் உதவியால் தொடர்பு பெற்றுவந்த நாம்நம்மின்தாய் மொழி தமிழ் ஆட்சிமொழியானால் பட்லரைப் போலிருக்கும் ஆங்கிலத்தை நீக்கிவிடுவோம்! ஆனால் ஆட்சியிலிருப்பவர்களும் அவசர அரசியல் வாதிகளும் உனக்கு பட்லரும் வேண்டாம், மனைவியும் வேண்டாம்! எடுப்புச் சாப்பாடு சாப்

(7—ம் பக்கம் பார்க்க)

சட்டி தூக்கும் பரதேசியிடம் பட்டு பீதாம்பரமா?

(6—ம் பக்கத் தொடர்ச்சி)

பிடு என்கிருர்கள். எடுப்புச் சாப்பாடு சாப்பிட்டால் நம்மின் உடல்நிலை என்ன ஆகும்! எடுப்புச் சாப்பாடாக உள்ள இந்தி மொழியும் நமக்கு தேவை இல்லை! தாய்மொழியான தமிழே ஆட்சிமொழியாக வேண்டும்.

நான் ஆங்கிலம் படிக்காதவர்களை தாழ்வாகப் பேசுவதாக யாரும் நினைக்க வேண்டாம்! நான் தலைவர் என்று மதித்த, மதித்துவரும் ஒரே ஒரு தலைவர் பெரியார் அவர்களே ஆங்கிலம் படிக்காதவர்கள்தான். அந்த தலைவர் ஒரு நாள் என்னிடம் "அண்ணுத்துரை தந்தி ஒன்று கொடுக்க வேண்டுமே என்ருர்! நான்தான் அவர் சீடப்பிள்ளை அப்போது! அவர் சொன்ஞர் தமிழில், நான்முன்ஞலேயேசொன்னேன், எழுதுங்கள்'' என்ருர்'' நான் எனக்குத் தெரிந்த சாதாரண ஆங்கிலத்தில் "ஐ டோல்டு ஆல்ரெடி'' என்று எழுதினேன்.

பெரியார் அவர்கள் முன்ஞலேயே சொன்னேன் என்று எழுதுய்யா என்ருர்கள். ஐயா ஆங்கிலத்தில் இப்படித்தான் எழுத முடியும் என்றேன்.

ஆல்ரெடிஐடோல்டட்என்று எழுதச் சொன்ஞர்! அப்படி எழுதக் கூடாது என்றேன் ஏன் அப்படி எழுதக்கூடாது?. அப்படித்தான் எழுதவேண்டும் என்று அங்கிருந்த இன்ஞெருவரைக் கூப்பிட்டு அப்படியே எழுதச் சொன்ஞர்!

அப்படி எழுதியதுகூட தவறில்லை! அதை அப்படியே போஸ்டாபீஸில் எடுத்துக் கொண்டார்கள்! ஆங்கிலம் தெரியாதவர்களையும் நான் மதிக்கிறேன்; ஆங்கிலம் தெரிந்தவர்கள்தான் அறிவாளிகள் என்றுசொல்லமாட்டேன் ஆங்கிலம் தெரியாதவர் அதிகம் பேசாதிருப்பது நல்லது. அதுவே நமது பண்பாடு. நம்முடைய தமிழ்மொழி ஆட்சிமொழியாக வரும்வரை நமக்கு தொடர்பு மொழியாக இணைப்பு மொழியாக ஆங்கிலமே இருக்கட்டும் என்றுதான் கூறிவருகிருேம்.

சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் மொழிப் பிரச்னையில் விவாதம் நடந்தபொழுது மந்திரி சுப்ரமண்யம் ஆசைத்தம்பிக்கு ஆங்கில மோகம் அதிகம் என்ருராம்! உடன் பக்கத்திலிருந்தகோவிந்தசாமி, யாருக்கு ஆங்கில முகம்? உனக்கு ஆங்கில முகம், உங்கப்பனுக்கு ஆங்கிலமுகம், உங்க பாட்டனுக்கு ஆங்கில முகம். எங்களுக்கா ஆங்கில முகம் என்ருய்? என்று பேச, சுப்ரமணியம் வெடவெடத்து "நான் என்னய்யா சொல்லி விட்டேன்'' என்று சொல்லிக் கொண்டிருந்த போது நான்வர சுப்ரமணியம் பாருங்க அண்ணுத்துரை ஆங்கில மோகம் என்று சொன்னேன்; உங்க கோவித்தசாமி இப்படிப் பேசிவிட்டார் என்று சொன்ஞர்! ஆங்கில மோகம் நமக்கு அல்ல. அவர்களுக்குத்தான் இருக்கிறது, சமீபத்தில் சட்டசபையில் ஒரு அம்மையார் பேசுகின்றபோது ஆங்கிலமே பாடமொழியாக இருக்க வேண்டும். அகில உலகமொழியாக இருக்கும் ஆங்கிலமே சிறந்தது என்று பேசியுள்ளார்! சுப்ரமணியம் குறிப்பிட்ட ஆங்கிலமோகம் அந்த அம்மையாருக்குத்தான் இருக்கிறது. தவருக நினைக்காதீர்கள். ஆங்கிலப்பற்றுதான் அந்த அம்மையாருக்கு அதிகம்!

ஆனுல் நாம் திட்டவட்டமாக கூறுவது ஆங்கிலம்நமக்கு ஒலிபெருக்கி ஆங்கிலம் பலகணி! அவர்கள்நம்மை ஆங்கில மோகம் கொண்டவர்கள் என்பதால். அவர்கள் தம் கடமையிலிருந்து நழுவி விடுகிருர்கள்! தம் கடமையிலிருந்து நழுவ, நம்மைஇப்படி அக்கோழைகள் தப்பிக்க இதை ஒரு திரையாகப் பயன் படுத்துகிருர்கள்.

நாம் தமிழ்மொழிதான் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்று திட்டவட்டமாக கூறிவிட்டோம்! இதில் நமக்கு மயக்கமோ மாசோ கிடையாது. சட்டமன்றத்தில் வாக்கெடுப்பு நடைபெறுவது தமிழில்தான் நடைபெறவேண்டும் என்று பேசினேன்! சென்ற சட்டமன்றத்தில் மசோதாவும் தமிழில்அச்சடிக்கப்பட்டுதான் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. நிதியமைச்சராக இருந்த சுப்ரமண்யம் அவர்கள் நிதிநிலை அறிக்கையென்று அச்சடித்த போது என்னைப் பார்த்து மணவறையில் அமர்ந்திருக்கும் மணமகன் யாரும் பார்க்காதபோது மணமகளைப் பார்த்து புன்னகை செய்வதுபோல் புன்னகைசெய்தார். அந்தப் புன்னகையை இப்போது நினைத்தாலும் என் உடம்பு பூரிக்கிறது. 1938ல் தமிழ் மொழியில் பற்று கொண்ட புலவர்களும் அறநெறியாளர்களும் வியாபாரிகளும் ஈடுபட்டு எதிர்த்த இந்தியை இப்பொழுது நாமெல்லாம் சிறைபட்டு எதிர்க்க வேண்டும்,செந்நீரைக்கொட்டி செந்தமிழைக் காக்க வேண்டும்! அந்தப் பணிக்கு ஆதரவாக உங்களை நீங்களே ஒப்படைத்து கொள்ளுங்கள் என பணிவோடு விரும்பி வேண்டுகிறேன்.

ஒரு வீட்டின் நாட்டுப் பெண்ணுக்கு உடல்நிலை சரியில்லாவிட்டால் பெண்ணின் கணவன் படுகின்ற கவலைக்கும் பெண்ணின் மாமியார் படுகின்ற கவலைக்கும் பக்கத்து வீட்டுக்காரர்கள் படும் கவலைக்கும் பூக்காரன் படும் கவலைக்கும் எவ்வளவோ வேறுபாடுகள் இருக்கும்.

''கணவன் மனைவியின்அவஸ்தையைக் கண்டு படும்வேதனை வெளியில் சொல்ல முடியாததாக இருக்கும், மாமியார் வேதனை ஒருவித கவலையுடையதாகும். பக்கத்துவீட்டார்கள் பாவம் என்று அனுதாபப்படுவார்கள்! ஆனுல் பூக்காரன் ஐயோ...அந்தப் புண்ணியவதி தினம் 2அணு பூவாங்குமே! அந்த புண்ணியவதிக்கு உடம்பு சரியில்லாததால் 2 அணு பூ நஷ்டமாயிற்றே என்றுதான் கவலைப்படுவான். அதைபோல் சிலர் கவலைபடுவது! இந்தியாவை ஒரே நாடாக்க ஒரே மொழி மக்களாக்க முனைந்துள்ளார்கள் இந்தி ஆதிக்கவெறியர்கள்! நாமும் கடமையைத் தட்டிக் கழித்துவிட்டால் இந்திமொழி நாடெங்கும் திணிக்கப்பட்டால் நாம் நான்காம்தர மக்களாகி விடுவோம்!

இந்திமொழியைப் 1938ம் ஆண்டு ராசகோபாலாச்சாரியார் திணித்தபொழுது இந்தியை நேஷனல் லாங்குவேஜ் என்ருர். தேசீயமொழி இந்திதான் என்ருர். ஆனுல் அது காமன்லாங்குவேஜ்ஜாக மாறியது; அதாவது பொதுமொழி இந்திதான் என்ருர்கள். கொஞ்ச நாட்களுக்குமுன் அது அபீஸீயல் லாங்குவேஜாக மாறியது. அதாவது ஆட்சிமொழி; அதிகார மொழியாக மாறியது. ஆனுல் இப்பொழுது அதற்கு பண்டிதர் நேரு புதிய உருவம்கொடுத்துள்ளார்! லிங் லாங்குவேஜ்; தொடர்புமொழியாக்குவதாக கூறுகிருர். இந்த நேரத்தில் நாமும் உறங்கிவிட்டால் தேசீய மொழி பொதுமொழியானதைப் போல் பொதுமொழி ஆட்சிமொழியானதைப்போல் ஆட்சிமொழி தொடர்புமொழி, ஆட்சிமொழி மொழி ஆகி, பொது மொழி தேசீய மொழி ஆகி, விட்டால் ஓர்மொழி அரசு; அதுவே பேரரசு, அதுதான் இந்தி அரசு என்ற நிலை ஏற்பட்டு விடும்! அதுவே வல்லரசாக மாறிவிடும்!

"கதவு திறந்துகிடந்ததென்ருல் திருடனுக்குதான் நல்லது. புண்ணுக்கு மருந்து போடாவிட்டால் அது உடலெங்கும் பரவிவிடும்! இந்திப்படையெடுப்பை நாம் தடுத்து நிறுத்தாவிடில் தமிழகம் திறந்த கதவாகி மீண்டு எடுப்பார் கைப் பிள்ளையாய் என்றென் அடிமையாய் வாழவேண்டும்!

கூடாரத்தில் ஒருவன் ஒரு ஒட்டகத்தின் மூக்குக்குமட்டும் இடம் கொடுங்கள் என்று கேட்டான், ஒட்டகத்தின் முன் காலை நுழைத்தான். வயிறு வரை கூடாரத்தில் நுழைத்தான்; பின் கால்வரை நுழைத்தான். கூடாரமே ஒட்டகத்தால் அடைபட்டு விட்டது. அதைப்போல் இந்திதொடர்பு மொழியாக வந்து ஒட்டி ஆட்சிமொழியாக மாறி தேசீய மொழியாக இருக்கின்ற ஆபத்தை நாம் உணர்ந்து தெரிந்து கொள்ள வேண்டும்!

இதை நாம் பேசுகின்ற பொழுது காமராசர் படித்தவர்களுக்கு அல்லவா இந்திப் படிப்பதைப் பற்றிய பிரச்சனை! நாம் ஏன் கவலைப்பட வேண்டுமென்று! படித்தவர்கள் என்ன அவ்வளவு அற்பமானவர்களா! படிப்பு என்பது பஞ்சமா பாதகங்களில் ஒன்ரு? படித்தவர்களைப்பற்றி கனம் காமராசர் பேசியது தவறென்றுகூட சொல்லவில்லை. படிக்காதவர்களைப் பற்றியே பேசுவது குற்றமென்றல்லவா நாம் கருதுகிருேம். ஜனநாயக நாட்டில் படித்தவர்களின் தொகை வளர வேண்டும்! நூற்றுக்கு 20 பேராக இருப்பது 80 பேராக வேண்டும் அப்பொழுதுதான் நாடு கல்வி வளர்ச்சியில் தேர்ச்சிபெறும்.

காமராசர்12500 பள்ளிகளை கட்டியுள்ளதாக கூறுகிருர், அவர் படிக்காவிட்டாலும் மக்கள் படிக்கவேண்டும் என்ற அக்கரை அவருக்கு இருக்கிறது. மூட்டைத் தூக்குபவன் கூட தன் பிள்ளை படித்து நல்ல உத்தியோகத்திற்கு வரவேண்டுமென்றுதான் நினைப்பான்.

உத்தியோகத் துறையில் ஈடுபட்டுள்ளோர் இந்திப் படிக்க வேண்டும்! இந்தி

(8-ம் பக்கம்பார்க்க)

சென்ற ஆண்டு செப்டம்பரில்

வேலூர் சிறையிலிருந்தேன்!

இந்த ஆண்டும் வெளியிலிருக்கமாட்டேன்

இதுவே என் முடிவு! உங்கள் முடிவென்ன?

(-7ம் பக்கத் தொடர்ச்சி)

படித்தால்தான் உத்தியோக உயர்வு கிடைக்கும். படித்தவர்களுக்கல்லவா அந்த கவலை என்கிருர்காமராசர்.

பாராளுமன்றத்தில் இந்தி வெறியர்கள் செய்கின்றஅட்டகாசத்தை நீங்கள் ஒருமுறை வந்தால் கூடப் பார்க்கலாம்.

ஆறு மந்திரிகளுள் டி. டி. கே. மட்டும் இந்தியில் பேச தெரியாது என்று கையைக் காட்டிச் சொல்வார்! ஏனென்ருல் அவர் கொஞ்சம் தைரியசாலி! அவருக்குப் பதவியை விடவும் தெரியும்; பதவியைப் பிடிக்கவும் தெரியும்! மற்ற மந்திரிகள் படுகின்ற பாட்டையும்—கையைப் பிசைவதையும்; நான் எங்கே மேலிருந்து அவர்களைப்பார்த்துவிடப் போகிறேன் என்று தலைகுனிந்து இருப்பதையும் பார்த்தால் பரிதாபமாகத்தான் இருக்கும்!

இந்திவெறியர் ஒருவரின் அட்டகாசத்தை இதுவரைநீங்கள் எந்த உலக வரலாற்றிலும் கண்டிருக்க முடியாது!

பாராளுமன்ற வராண்டாவில் ஏராளமான சுள்ளி விறகுகளை குவித்து நெய்யைஊற்றி எரிவைத்தார். ஓர் உறுப்பினர் காலை 8மணிக்கு இந்த ஓமம் வளர்த்தார்! ஏனென்று கேட்டால் இந்த மன்றத்தில் பாவங்களும்மொழித்துவேஷங்களும் சூழ்ந்து கொண்டது. அதைப் போக்கவே ஓமம் வளர்க்கிறேன் என்ருர்!

இதைப் போன்ற அநாகரீக செயல்களில் வடவர்கள் ஈடுபட்டு வருகிருர்கள்! நாமும் பொறுப்பின்றி இருப்போமேயாளுல் நம்முடைய நாட்டில் ஒரு சில வருஷங்களுக்குள் வடநாட்டு முனிபுங்கவர்களும் தவரிஷிகளும் வந்துவிடுவார்கள், இதை தடுத்து நிறுத்தி தாழ்ந்துகிடக்கும் தாயகத்தை காக்க நாம் நம்மையே அர்ப்பணிக்க ஆயத்தமாக வேண்டும்!

தி. மு, கழகம் எப்படி நாட்டு நாட்டுப் பிரிவினைப் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கிறதோ—காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை தடுப்பதில் எப்படி தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளதோ— இடைத்தேர்தல் வந்தால் தன்னை எப்படி ஈடுபடுத்திக் கொள்கிறதோ. நாட்டு மக்களை வாட்டுகின்ற வரி வந்தால் எவ்வாறு எதிர்க்கிறதோ அப்படிப்பட்ட நித்திய நிகழ்ச்சிகளில் ஒன்ருக அன்ருட நடவடிக்கைகளில் ஒன்ருக இந்தி திணிப்பு திரும்பப் பெறப்படுகிறவரையில் அரசியல் சட்டத்தைத் திருத்தப்படுகிறவரையில் இந்தப் போராட்டம் தொடர்ந்து நடைபெறும். இந்தமாதம்வர முடியாதவர்கள்அடுத்தமாதம் வரலாம்! இந்த வருடத்தில் போராட்டத்தில் கலந்து கொள்ள முடியாதவர்கள் அடுத்த வருடம் கலந்துகொள்ளலாம். அப்படித்தான் இந்தப் போராட்டம் நடைபெறும். சாதாரணமான போராட்டமல்ல, "கலையை இலக்கிய மரபைபண்பாட்டை —மக்களின் உரிமையை — மொழியை வாழ்க்கைப் பிரச்சனையைப்பாதுகாக்கும் போராட்டம். இந்த லட்சியத்தில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வதுஉங்கள் வாழ்நாளில் கிடைக்காதது, கிடைக்க முடியாதது! உங்களை பணிவன்போடு வேண்டுகிறேன். இறுதியில் போராட்டக் களத்திலே உங்களைச் சந்திக்க தயார்! அப்படிப் பேசுவது சட்டப்படி குற்றம்தான்! இருப்பினும் இறுதியிலே நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்!

சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் விலைவாசி மறியலில் ஈடுபட்டதால் வேலூர் சிறையிலிருந்தேன், இந்த ஆண்டு செப்டம்பர் திங்களிலும் வெளியே இருக்கமாட்டேன். என்னுடைய முடிவைக் கூறிவிட்டேன்! உங்களுடைய முடிவைக்கூறுங்கள்!!



இல்லற வாழ்க்கையில் பலஹீனமா?

வாலிபப் பருவத்திலே வயோதிகத் தன்மையா?

உடலில்பலக்குறைவு சக்தி குறைவா?

அப்படி இருந்தால் நீங்கள் இனி கவலைப்படத் தேவையில்லை.

பிரபல சித்த வைத்தியர்

டாக்டர் எஸ். ஆர். சிவராஜ்

அவர்களின் தயாரிப்புகளான

'சிவராஜ்'	ராஜாமிர்தம்	(காலை, மாலை உள்ளுக்கு)
சிவராஜ்'	ராஜ்பில்ஸ்	(காலை, மாலை உள்ளுக்கு)
'சிவராஜ்'	தாமரைத் தைலம்	(ஸ்நானத்திற்கு)
சிவராஜ்'	லேபனத்தைலம்	(மேல்பூச்சு)

இவைகளைத் தொடர்ந்து சாப்பிட்டு இழந்து போன சக்தியை மீண்டும் பெற்று வாழ்க்கையில் புத்துணர்ச்சி பெறலாம்.

1 மாதம் உபயோகிக்கும் மருந்துகள்
4-ம் சேர்ந்தது ரூ. 23-00

(தபால் செலவு ரூ. 2-50 தனி)

விபரங்களுக்கு தொடர்பு கொள்க:

சிவராஜ் சித்த ஆயுர்வேத வைத்தியசாலை

சிவதாபுரம் அஞ்சல் :: சேலம்-2

கழகத்தை அழிக்க சட்டம்! சட்டத்தைத் திருத்தக் குழு!

(4- ம் பக்கத் தொடர்ச்சி)

சட்டமன்றத் தொகுதிகளைப் பெற்றிருந்தும், தமிழ் நாடு மட்டும் வஞ்சிக்கப்பட்டிருக்கும் போக்கை மாற்றும் வகையிலும் ஒரு பாராளுமன்ற தொகுதிக்கு ஏழு (7) சட்ட மன்றத்தொகுதிகள் என்ற விதி முறையை ஏற்று, தமிழ்நாடு சட்ட மன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையை 273 தொகுதிகளாக உயர்த்துமாறு தொகுதி சீரமைப்புக் கமிஷனை இப்பொதுக்குழு வற்புறுத்துகிறது.

முன்: கே. ஏ, மதியழகன்
வழி: ஏ. கோவிந்தசாமி
க, இராசாராம்

தீர்மானம்—7

"தமிழ் நாடு" பெயர் மாற்றம்

"சென்னை மாநிலத்திற்குத் "தமிழ் நாடு" என்னும் பெயர் வழக்கிலிருந்தும், "தமிழ் நாடு அரசாங்கம் என்னும் பெயரை மாநில அரசு ஏற்றிருந்தும், மக்கள் விருப்பமும் உரிமையும் அதுவாக அமைந்தும் மத்திய அரசினர் தமிழ்நாடு என்னும்பெயரை ஏற்று, அரசியல் சட்டத்தில் இடம் பெறச் செய்ய மறுத்திருப்பதை இப்பொதுக்குழு கண்டிப்பதுடன். விரைவில் அந்தப் பெயரை அரசியல் சட்டத்தில் இடம் பெறச் செய்ய வேண்டுமென வற்புறுத்துகிறது.

முன்: மன்னை. நாராயணசாமி
வழி: வை. இரத்தினவேல்

தீர்மானம்—8

கிராமத் தொண்டர் படை

"1963 மே திங்களில் (சென்ற மாதம்) நமது மாநிலத்தில் உள்ள பஞ்சாயத்து யூனியன்களில் கிராமத் தொண்டர் படை பயிற்சி முகாம் ஒரு வார காலம் நடைபெற்றது. மேற்படி பயிற்சி முகாம்களில் பயிற்சி பெறும் தொண்டர்கள் கதரிலேயே அரைக் கைச் சட்டையும், அரைக் கால் சட்டையும் தலையில் கதர் தொப்பியும் தான் அணிந்து வரவேண்டுமென யூனியன்கள் மூலம் உத்திரவிடப்பட்டு அதன்படியே பயிற்சியும் நடைபெற்றுள்ளது. அனைத்து கட்சிகளும் கலந்து கொள்ளும் விதத்தில் மேற்படி பயிற்சி முகாமும், உடையும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. மக்களின் வரிப் பணத்தில் ஆளுங்கட்சி காங்கிரசு இளைஞர்களின் பயிற்சி முகாமை நடத்துவது போலவே இம்முறை அமைந்துள்ளது குறித்து இப்பொதுக்குழு கண்டிக்கிறது,

உயர்நிலைப்பள்ளி—கல்லூரிகளில் உள்ள என். சி. சி. ஏ.சி.சி. முகாம்களைப் போல உடைகளைத் தேர்ந்தெடுத்து நல்ல முறையில் அனைத்துக் கட்சியினரும் பங்கு பெறும் விதத்தில் இனி மேலாவது இப்பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கு அரசியலார் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இப்பொதுக் குழு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

முன்: பி. ஏ. சாமிநாதன்
வழி: ம, கமலநாதன்

தீர்மானம்—9

நில உச்ச வரம்புத் திட்டம்

"சர்க்காரால் கொண்டு வரப்பட்டிருக்கும் நில உடமை உச்ச வரம்புச் சட்டம், விவசாய நில உச்சவரம்புச் சட்டம் ஆகிய சட்டங்கள் நடைமுறையில் இருந்தும் சரியானபடி சட்டம் செயல் படுத்தப்படாமல் இருப்பதால்,அதைப் பரிசீலிப்பதற்கென விவசாய பிரதிநிதிகள், கொண்ட குழு ஒன்று அமைக்க வேண்டுமென இப்பொதுக்குழு சர்க்காரை கேட்டுக் கொள்கிறது.

முன்: கோ. சி. மணி
வழி; நா. தருமலிங்கம்
கு. அடைக்கலம்

அரசியல் சட்ட 16.வது திருத்தம் ஆராயக்குழு

11—வது தீர்மானம்

'அண்மையில் நிறைவேற்றப்பட்ட, அரசியல் சட்ட 16-வது திருத்த மசோதா, எந்த ஜனநாயக ஆட்சியை மதிப்பளித்து நிலைநாட்டித் தீரவேண்டிய அடிப்படை உரிமைகளை குறைத்து, பொருளற்றதாகவும் பயனற்றதாகவும் ஆக்கப்படுவதுடன் ஜனநாயகப் பண்பாட்டை அழித்து, ஒரு கட்சி சர்வாதிகாரத்துக்கு வழி வகுப்பதாக அமைந்துள்ளது என்பதை, பொது மக்களுக்கு இப்பொதுக்குழு சுட்டிக் காட்டுகிறது.

ஜனநாயக நெறியை அழிக்கும் இந்தப் போக்கினை, இப் பொதுக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

அரசினரின் இந்தப் போக்குதடுத்துநிறுத்தப்படாவிட்டால் ஜனநாயகப் பண்பாடு சிதைக்கப்பட்டுப் போய்விடும் என்பதை உணர்ந்து, பேச்சுரிமையைக் குறைக்கவும் பறிக்கவும் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தச் சட்டத்தைக் கண்டித்து எல்லா முற்போக்காளர்களும், அமைப்புக்களும் கிளர்ந்தெழ வேண்டுமென இப்பொதுக்குழு கேட்டுக் கொள்ளுகிறது.

ஜனநாயக பண்புடனும் அறநெறிநின்றும்பணியாற்றி,மக்களின் பேராதரவைப் பெறுவதிலேதொடர்ச்சியானவளர்ச்சியை பெற்று தமிழக சட்டமன்றத்தில் எதிர்கட்சியாக விளங்கி காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்தும் வல்லமையைப்பெற்றுக் கொண்டு வருவதும், திராவிடத்தின் உரிமைகாத்திடும் பாசறையாக அமைந்திருப்பதுமான தி. மு. கழகத்தை அரசியல் சட்ட 16-வது திருத்தத்தைக் கருவியாகக் கொண்டு அழித்துவிடக் காங்கிரசாட்சி முனையுமானால், தி. மு. கழகம் மூலாதாரக் கொள்கையைப் பாதுகாத்துக் கொள்ளவும், அமைப்பு அழிக்கப்பட்டு விடாமலிருக்கவும், அரசியல் நீதியியல், கிளர்ச்சியியல் ஆகிய பல்வேறு முனைகளில், மேற்கொள்ள வேண்டிய வழி வகைகளை நிலைமைக்கு ஏற்ப எடுத்து செயல்படுத்தும் உரிமையைப் பொதுச் செயலாளருக்கு அளிப்பதுடன், இந்தப்பிரச்சினை பற்றிய எல்லா முனைகளையும் ஆராய்ந்தறிந்து பொதுச் செயலாளருக்கு கருத்தறிவிக்க தோழர் இரா. செழியன் எம், ஏ., எம். பி., அவர்கள் தலைமையில் தோழர்கள். கே. ஏ. மதியழகன் எம். எல். ஏ., டி. கே. சீனுவாசன், அரங்கண்ணல் எம். எல். ஏ.' தில்லை வில்லாளன் எம். ஏ., பி. எல்., ஆகியோர் கொண்ட குழுவை அமைக்கிறது. இந்தக் குழுவிற்கு மேலும் மூவரைச் சேர்த்துக்கொள்ளும்உரிமையும் அளிக்கப்படுகிறது.

முன்: கி. மனோகரன்
வழி: டாக்டர் சத்தியவாணிமுத்து,
டாக்டர் அருணசலம்

முரசொலிக்கட்டும்!

(அன்பழகன்)

வந்தது வந்தது இந்திப் போராட்டம்
வடவர்க்கு இதனால் புத்திமாருட்டம்
செந்தமிழ் வாழ்ந்திட செல்வோம்சிறைக்கோட்டம்
திக்கெட்டும் திராவிடர் முரசொலிகேட்கட்டும்!

செங்கோட்டைக் கதவுகள் திறக்கட்டும் இதனால்
திருந்தாத உள்ளங்கள் திருந்தட்டும் ஒருநாள்
சங்கத்தமிழ் தன்னைப் பங்கு போட வரும்
மந்திகள் செயல்தன்னை மாய்த்திடவே இன்று

காற்றுக்கும் நெருப்புக்கும் மூத்ததடா-நீண்ட
கடலும் வானும் இதன் தங்கையடா
சோற்றுத்தடியர்கள் சூழ்ச்சியினால் இதை
வீழ்த்திடவே வழி செய்வதோடா!

(3-ம்பக்கம் தொடர்ச்சி)

எங்களுக்கும் சம்ஸ்கிருதத்துக்கும் எந்தவித தொடர்புமில்லை யென்றுசொல்லிக் கொள்வதில் பெருமை கொள்கிறவர்கள் நாங்கள்.

எங்கள் தமிழ் மொழி சம்ஸ்கிருதத்திலிருந்து வந்ததல்ல; சம்ஸ்கிருதத்துக்கும் தமிழுக்கும் எந்த விதத் தொடர்பும் கிடையாது. கூடிய வரையில் சம்ஸ்கிருதம் கலவாமல் எங்கள் தமிழைக் காக்க நாங்கள்முயற்சித்துக் கொண்டு வருகிறோம்! இப்போது இதையெல்லாம் நாங்கள விட்டாக வேண்டும். சம்ஸ்கிருதத்திலிருக்கிறசொற்களையெல்லாம் நாங்கள் எடுத்துக் கொண்டாக வேண்டும். எங்களுடைய இத்தனை நாள் பழக்கங்களையும் முறைகளையுமே மாற்றிக் கொண்டாக வேண்டும். சொந்தமான தன்னிச்சையான, வளமான மொழியான தமிழைகொண்ட எங்களுக்கு சம்ஸ்கிருதத்தின் தொடர்பு சிறிதுமில்லாத தனி மொழி என்று பெருமை பேசுகிற எங்களுக்கு, சம்ஸ்கிருதத்தோடு சரிசமமாக நிற்கக் கூடிய ஒரே ஒரு மொழி என்கிற பெருமையைக் கொண்ட எங்களுக்கு, இப்போதுள்ள நிலைமைகளை ஏற்க வேண்டுமென் பது எப்படியிருக்கும்என்பதை எண்ணிப்பாருங்கள். முதலில் நாங்கள் எங்கள் பழைய நிலையை விட்டுக் கொடுக்க வேண்டும்!

அடுத்தபடி இந்தியோ அல்லது சம்ஸ்கிருதத்தையோப் படிக்க வேண்டும். இந்தச் சூழ்நிலைக்கு எங்கள் மக்களைத் தயார் செய்வதென்பது எளிதல்ல. அவர்களைத் தயார் செய்த பிறகுதான், யாவும் சாத்தியமாகும். அப்படி எங்கள் மக்கள் இந்தியைப் படிக்க ஆரம்பித்து, அப்பப்படிப்படித்து, இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட உங்கள் அளவுக்கு, வந்து, அதற்குப்பிறகு உத்தியோகங்களிலும் மற்ற துறைகளிலும் உங்களோடு இடம் பெற வேண்டும்.

இது மட்டுமல்ல, எங்கள் நிலைமையை என்றுமே சிக்கலாயிருக்கும்படி நீங்கள் வேறு ஆக்குகிறீர்கள். இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட உங்களுக்கு இந்தியை மட்டும் படித்தால் போதும.

ஆனல், தெற்கிலிருக்கிற எங்களுக்கு இந்தியை மட்டுமல்ல; எங்கள் தாய் மொழியையும் படிக்க வேண்டும்; உங்கள் இந்திக்காக எங்கள் தாய்மொழியை விட முடியுமா? பிறகு, வட்டார மொழி வேறுள்ளது. அதையும் படிக்க வேண்டும். எத்தகைய தியாகங்களை நாங்கள் செய்கிறோம் என்பதைவடக்கிலிருக்கிற நீங்கள் கொஞ்சமாவது உணர்ந்து பார்க்க வேண்டும்!!

இவ்வளவு தியாகத்தைச் செய்கிற நாங்கள் உங்களைத் திருப்பி என்ன கேட்கிறோம்? பிரச்சினைகளை மேலும் மேலும் சிரமமாக்காதீர்கள் என்கிறோம். இந்தி எழுத்து மட்டுமல்ல, எண்களைக்கூட இந்தியிலேயிருக்க வேண்டும் என்கிறீர்கள். எண்கள், கணக்கெழுதவும், புள்ளி விபரம் எடுக்கவும், இதைப் போல பற்பல காரியங்களுக்கும் பயன்படுகின்றன. நீங்கள், மொழியை எடுத்துக் கொண்டு போவது மட்டுமல்ல, எங்கள் எழுத்துக் குப்பதில் இன்னெரு எழுத்தை திணிப்பது மட்டுமல்ல, எண்களையும் இந்தியிலாக்க வேண்டும் என்கிறீர்கள்! இனிமேற்கொண்டு நாங்கள் எழுதி வருகிற கணக்குகளையெல்லாம் இந்தி எண்களாலேயே எழுதி வருமானவரி அதிகாரிகளிடம் காட்ட வேண்டும் என்கிறீர்கள். இப்பொழுதுள்ள எண்களிலேயே எல்லாவற்றையும் குறிப்பது என்கிற பழக்கம் எங்களுக்கு பல்லாண்டுகால மாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. எண்களை பற்றிய பிரச்சினை தென்னுட்டிலுள்ள எங்களுக்கு மட்டுமல்ல.

இந்தியாவிலுள்ள மக்களையும் அதே சமயம் இந்தியாவுக்கு வெளியேயுள்ள மக்களையும் பாதிக்கக்கூடிய விஷயமாகும். வெளிநாட்டில் கையாளப்படும் புள்ளிவிபரங்களை நாம் அறிய வேண்டுமே!வெளி நாட்டு வர்த்தகத்தில் கணக்குகளும் விஞ்ஞானசம்பந்தமான குறிப்புகளும் இப்போதுள்ள எண்களிலேயே எழுதப்பட்டு வருகின்றன.

இதையெல்லாம் கவனிக்காமல் எண்கள்கூட இந்தியில் தான் இருக்க வேண்டுமென்று சொன்னல், இந்தக் காரியங்களுக்கெல்லாம் நாம் என்ன செய்யப் போகிறோம்,

வெளிநாட்டிலிருந்து பாங்கி முறைகளைப் பற்றியோ, விஞ்ஞானக்கணக்குகளையோபடிக்க வேண்டுமென்ருல் அவையெல்லாம் உலகம் ஒப்புக் கொண்டுள்ள எண்களை மாற்றி இந்தி எண்களைப் புகுத்தினல் இயலுமா என்பதை யோசியுங்கள்.

சர்வதேச எண்களை நீங்கள் மறுக்கக் காரணம் என்ன? நூற்றுக்கு நூறு எல்லாம்இந்தியிலிருக்கவேண்டும் என்பது தானே! இந்தி எழுத்து இருக்கப்போகிறது அதனல் இந்தியிலேயே எண்களும் இருக்க வேண்டும் என்பது தானே! இதனல் என்ன பலாபலன்கள் வரும் என்பதை யோசிக்கவும் மறுக்கிறீர்களே?

அகில உலகமும் சர்வதேச எண்களை ஒப்புக் கொண்டிருக்கிறதே!இந்தியாமுழுவதையும் கட்டி ஆதிக்கம் செலுத்த விரும்புகிறோம் என்று சொல்லுங்கள்! ஏன் இதைச் சொல்ல வெட்கப்படுகின்றீர்கள்?

இந்திக்காக நாங்கள் எங்கள் மொழியைக்கூட இழக்கிறோம்! அது கூடப் பெரிதாக தெரியவில்லை, ஆனல் இந்திக்காரர் களாகிய நீங்கள் எங்களை நடத்துகின்ற விதமும், எதையும் விருப்பம்போல் சாதிக்கலாம் என்று நடக்கிற விதமும், நாங்கள் சொல்வதையெல்லாம் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று காட்டுகின்ற போக்கும் கண்டு, உண்மையிலேயே எங்களுக்குக் கலக்கமாயிருக்கிறது!

அப்படியெல்லாம் நடக்க முயற்சிக்காதீர்கள் என்று வட நாட்டுக்காரர்களுக்கு நான் வேண்டுகோள் விடுக்கிறேன். நாமெல்லாம் நமக்கெல்லாம் பொதுவான ஒரு நாட்டிலிருக்கிறோம், ஒரு நாட்டை சிருஷ்டிக்கிறோம்—ஆம்! ஒரே மக்கள் வாழுகின்ற தேசம் என்பது இப்போது இல்லை——என்கிற எண்ணத்தோடு நடக்காமல் விட்டுக்கொடுத்து வாழ்வோம் என்கிற தன்மையில் செல்லாமல், உங்கள் விருப்பத்துக்கெல்லாம் எல்லோரும் தலையாட்ட வேண்டுமென்று எதிர்பார்க்காதீர்கள் அப்படியெல்லாம் நடந்தால், இந்தியா முன்னேருது; எல்லோரும்சேர்ந்த ஒரு ஐக்கியமான தேசமாக உருவாகாது.

இதையெல்லாம் எண்ணுகின்றபோது எங்களுடைய எதிர்காலம்எப்படியிருக்குமோ என்று எண்ணவே நடுங்குகிறேன்! ஒருவரையொருவர் புரிந்துகொண்டு நடக்க வேண்டும்.

நமக்குள் சிக்கல்கள் ஏற்படுமானல் சுற்றியிருக்கும் தேசங்கள் சிக்கலைப் பயன்படுத்த முனையும் என்பதைச் சரிதம் நமக்குச் சொல்கிறது. பர்மாவையும் மற்ற நாடுகளையும் எண்ணுங்கள்.நாளைக்கு இங்கே ஒரு தொல்லை ஏற்படுகிறதென்ருல், என்ன ஆகும்?

ஒரே தேசம், அத்தேசத்தில் நமக்கும் பங்குண்டு இது நமது தேசம் என்கிற எண்ணத்தை உருவாக்காமல், ஒரு பகுதிஇன்னெரு பகுதியை அடக்கியாள முடியும் என்கிற போக்கிலேயே நடந்தால், எப்படி நாடு முன்னேறும்? நாடுதான் எப்படிப் பாதுகாப்பாயிருக்கும்?தலைவர் அவர்களே! இந்த ஒரு சில வார்த்தைகளோடு, "இந்திக் காரர்களே! அடக்கியாளநினைக்காதீர்கள், கொஞ்சம் ஒத்துப் போக பழகுங்கள்", என்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

அண்ணாவிற்கு

கார் பரிசளிப்பு விழா

சென்ற ஆண்டு, அறிஞர் அண்ணா அவர்களுக்கு சிதம்பரம் நகரில், மாநிலம் முழுவதும் பங்குகொண்டு திராவிட இனத்தவர் அனைவரின் சார்பில் கார் பரிசளிக்க ஏற்பாடு செய்து நிதி திரட்டப்பட்டதும் சீன ஆக்கிரமிப்பால், ஏற்பட்ட நெருக்கடி நிலையைக் கருதி, அறிஞர் அண்ணா அவர்கள் கட்டளைக்கிணங்க ஒத்தி வைத்ததும் தாங்கள் அறிந்ததே. ஒத்தி வைக்கப்பட்ட விழாவை மீண்டும் ஜூலைத் திங்களில் நடத்த அறிஞர் அண்ணா இசைவு கிடைத்துவிட்டதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த விழாவின் வெற்றிக்கு, ஏற்கனவே அன்பர்கள் பல்ர் நிதி உதவி உள்ளார்கள். இன்னும் பலர் நிதி உதவ வாக்களித்துள்ளார்கள். அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறோம். பொது மக்களும், கழக அன்பர்களும் பெரிதும் உதவிட வேண்டுகின்றோம். தங்களாலியன்ற பொருளுதவி அளித்து விழாவை சிறப்பிக்க வேண்டுகிறோம்.

கார் பரிசளிப்பு விழாக் குழுவினர்
சிதம்பரம்

நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி:—
ஆர். தில்லைவில்லாளன் எம். ஏ., பி. எல்.,
'மீனாட்சி இல்லம்', சிதம்பரம்.

வந்தார்; தந்தார் !

பண்டிதர் நேரு பவனி வருகிறார் என்பதற்காக பிற மாநிலங்களிலிருந்து ஏராளமான போலீஸ் படைகள் சென்னையில் குவிக்கப்பட்டது! எதிர்பார்த்தபடி பண்டிதர் வந்தார். காமராசரும் கவர்னரும் கை குலுக்கி மாலை மரியாதைகள் செய்து வரவேற்றனர்!

விருந்து எல்லாம் நடைபெற்றது! சென்னை கடற்கரையில் மாபெரும் பொதுக் கூட்டம்; நேரு பேசுகிறார். நம்மின் மொழிக்கு ஏதாவது உறுதிமொழி தருவார் என்று எதிர்பார்த்து ஏராளமான மக்கள் கூடினார்கள்! பண்டிதர் வந்தார்! பேசினார்! "சமீபத்தில் பார்லிமெண்டில் நிறைவேறிய மசோதாவில் என் உறுதி மொழி நிறைவேறியிருக்கிறது! ஆனாலும் இந்தியை படித்துக் கொள்வது அவசியம்! ஆங்கிலம் ஒரு அன்னியமொழி; நமது நாட்டின் ஆட்சி மொழியாக நமது மொழிகளில் ஒன்றாகிய இந்தியே இருப்பது நல்லது; நீங்கள் அறிவுடையவர்கள்; ஆகையால் இந்தியைப் படித்துக் கொள்ளுங்கள்" என்று பேசியுள்ளார்!

அது மட்டுமல்ல; மொழிப் பிரச்சினையை வைத்துக் கொண்டு அரசியல் கிளர்ச்சியில் ஈடுபடுவது நல்லதல்ல; அது கட்சியை வளர்க்க முனைவதற்கு அவர்கள் இதை அரசியல் பிரச்சினையாக்குகிறார்கள்" போராட்டம் நடத்தி ஒன்றும் செய்ய முடியாது என்று அதிகாரபோதையோடு—ஆணவத்தோடு பேசியிருக்கிறார்!

"நான்சென்ஸ்" என்ற பண்டிதர் அறிவாளிகள் என்று தமிழகத்து மக்கள் தலையில் ஐஸ் வைத்து இந்தியைப் படியுங்கள் என்று சொல்லிவிட்டார்!

உறுதிமொழியை எல்லாம் சட்டத்தில் நிறைவேற்ற முடியுமா? என்று பேசியவர் இன்று உறுதிமொழி சட்டத்தில் இடம் பெற்றிருக்கிறது என்பது வியப்புக்குழுயது மட்டுமல்ல; விசித்திரமானதுங்கூட; காமராசர் பேசுவதுபோல் மொழிப் பிரச்சினையில் பண்டிதரும் பேசியுள்ளார்.

மக்கள் எதிர்பார்த்ததை பண்டிதர் பேசினாரா என்றால் இல்லை. ஏராளமான பொருட்செலவுடன் எல்லாம் அரசாங்க செலவுதான்! ஆனாலும் மக்கள் தந்த பணம்; அதிலே உல்லாசமாக பவனி வந்த பண்டிதர் தமிழகத்து மக்களுக்கு என்ன தந்தார்; மாபெரும் ஏமாற்றத்தைத் தந்தார்.

குளக்கரையில்...!

"அலமூ! தி. மு. க. இந்தியை எதிர்த்துப் போராடப் போகிறதாம்..."

"அவசியம் செய்யணும்டி! என் கணவருடைய தம்பி டில்லியிலே வேலையிலேருக்கார். பிரமோஷனே கிடைக்கலியாம், இந்திக்காராக்கிட்டயே."

"ஒரே தேசம்! ஒற்றுமையாயிருக்கணும்னு சொல்ரோமே ஒழிய, இதெல்லாம் போலீடி! எவன் ஒரே தேசம்னு நினைக்கிறான்' நினைச்சா இந்திப் பேசவரங்கன்னு நம்மை இந்திப் பேசறவன் மட்டமா நினைப்பானா?"

"ஆமாமா! இன்னைக்கு இல்லேன்னாலும் ஒரு நாளைக்கு தி. மு. க. சொல்றபடிதாண்டி நடக்கப் போகுது. நீன்னா பாரேன்! எப்படி ஒற்றுமையாயிருக்க முடியும்? வடநாட்டுக்காராளே, எங்களைப் பிரிச்சு தனியா அனுப்பிச்சுடுன்னு சண்டைக்கு வரப்போரா, பாரு...!"

திண்ணையில்...!

"என்ன ஓய்! பார்த்தீரா? படுசாமர்த்தியசாலிகள் ஓய் பசங்க!!"

"யாரைச் சொல்கிறீர்?"

"இப்போதெல்லாம் நேக்கு எப்பப் பார்த்தாலும் ஒரே ஒருத்த ஞாபகம்தான். நல்ல பிள்ளைங்க. நல்லாத் தமிழ் பேசறாங்க நியாயத்துக்காக பாடுபடுறாங்க..."

"அதுதான் ஓய்! யாரைச் சொல்றீர்?"

"தி. மு. க. வைத்தான்!! அவாளே ஒழிச்சிக்கட்ட இந்தக் காங்கிரஸ்காரா, சட்டம் கொண்டாந்திருக்காங்களே. அதுக்கு என்ன பதில் சொல்லப் போரா! பொதுக்குழுவிலே என்ன செய்யப் போரா!ன்னுஎதிர்ப்பார்த்துட்டிருந்தேன் ஓய் பிரமாதமா, ஒரு தீர்மானம்போட்டிருக்கா.."

"என்ன தீர்மானம், ஓய்!"

"ஒரு கமிட்டி போட்டு, மாநில சர்க்கார் அது சம்பந்தமாச் சட்டம் கொண்டாந்த பிறகு, என்ன நடவடிக்கையெடுக்கணும்கிறதை அந்தக் கமிட்டி சொல்லும்னு சொல்லியிருக்கா..."

"ஆமாம் ஓய்! அண்ணாதுரை, ஒரு நிருபர் கேள்வி கேட்டபோது சொன்ன பதிலைப் பார்த்தீரா?"

"ஏது ஓய்! ஒரு சர்க்காரே தன்னுடைய அரசியல் சட்டத்தை அடிக்கடி ஆளாகிறப்போ, நெருக்கடிக்கு ஆளான கட்சி தன் அமைப்பில் சில விதிகளை மாற்றுவதில் அவமானம் ஏதுமில்லை என்று சொன்னாரே! அது தானே!!"

ஆமாமா...பெரிய ஆள்ஓய் அவர்! பெரிய 'பூதம்' போல வளர்ந்து வந்த காமராசரைச் சந்திக்கக்கூடிய சரியான கட்சியும் தி. மு. க.தான்—சரியான தலைவரும் அண்ணாதுரைதான்.

அறிவிப்பு

பொதுக்குழு புகைப்படங்கள் குறித்த காலத்தில் கிடைக்கவில்லை! அதனால் அடுத்த இதழில் பொதுக்குழு புகைப்படங்களுடன் வெளிவரும்.

(ஆ-ர்)

கேள்வி பதில்

கே: வடநாட்டாதிக்கத்தை எதிர்க்கும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி புரியும் மாநகராட்சி மன்றம், காங்கிரஸ்காரரான சத்தியமூர்த்தி சிலையைப் பண்டித நேரு அவர்களைக் கொண்டு திறப்பது சரியா?

—வேங்கை வேந்தன்
பெரம்பூர்

ப: ஆதிக்கத்தை நாம் எதிர்க்கிறோமேயொழிய, ஆட்களின்சேவைகளையோ குணங்களையோ அல்ல! பண்டித நேருவை மட்டுமல்ல, வடநாட்டைச் சேர்ந்த காந்தியடிகள் சேவை, தாகூரின் திறமை ஆகியவைகளை என்றும் நாம் போற்றியே வருகிறோம்! புத்தரும் அசோகரும் யார்? வடக்கர்தான்! அமெரிக்க ஆபிரகாம் லிங்கனும் பிரெஞ்சு ரூசோவும் யார்? வெளிநாட்டார் தானே!! எங்கெங்கு நல்லதும், மக்கள் தியாகிகளும் இருக்கிறார்களோ, அவர்களையெல்லாம் மனதாரப் பாராட்டி, அவர்கள் காட்டிய நல்வழிகளை நாம் மேற்கொள்ள வேண்டுமென்று சொல்வதுதான் நமது கண்ணியமாகும். அதே வகையில்தான் தமிழகத்தின் அரசியல் துறையில் ஈடுபட்டிருந்த திருவாளர் சத்தியமூர்த்தியின் சிலையைக்கார்ப்பரேஷனில் நாம் வைக்கிறோம்! இது மட்டுமல்ல, தோழர்முனுசாமி மேயராக இருந்தபோது, முதலமைச்சர் காமராசரின்சிலையையும் சென்னையில் வைத்தவர்கள் நாம்!! இந்தப் பெருந்தன்மையும் அரசியல்நாகரீகமும் தான் அண்ணா அவர்கள் நாட்டில் மலரவேண்டுமென விரும்புகிறார். மாற்றான் தோட்டத்து மல்லிகையென்றால் மணக்காது என்பது வெறியர்கள் வழி. அண்ணாவை தமிழ்நாட்டுக் காங்கிரஸ் பேச்சாளர்கள் எப்படியெப்படி பேசுகிறார்கள் என்பது நம்க்குத் தெரியும்! இன்னா செய்தாருக்கும் இனியவைசெய்கிறோம்நாம்! இதில் ஒன்றும் தவறில்லை. உலகம் நமது கண்ணியம் கண்டு மகிழும்.

° ° °

கே: மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிடி வோட்டுக் கிடைத்தால்தானே பார்லிமெண்டில் வெற்றி பெற முடியும். இந்தியை எதிர்க்கிறீர்களே! நீங்கள் எப்படி மெஜாரிடியைப் பெற முடியும்? அப்படிப் பெறாவிட்டால் எப்படி வெற்றி பெற முடியும்?

—சுந்திரமூர்த்தி
பொன்மலை

ப: கோரிக்கையிலுள்ள வலிவையும் நியாயத்தையும் காட்டும் கிளர்ச்சி நல்ல முறையில்உருப்பெறுமானால் எந்த அரசும்,சிக்கலிலிருந்து மீள ஏதாவது வழி காணத்தான் நேரும். நாகர்கள் 'நாக நாடு' அமைக்க வேண்டும் என்றார்கள். அவர்கள் நம்மைவிட மைனாரிடிதான். வடநாட்டு பார்லிமெண்டு உறுப்பினர்கள் ஏற்கவில்லை. ஆனாலும் ஆளும் கட்சி முடிவெடுத்து அதை ஆதரித்துச் சட்டமேவரவில்லையா? நமது கிளர்ச்சி ஒழுங்காக உருவெடுக்குமானால் பலத்த மெஜாரிடியிலுள்ள அரசாங்கமே, தன் கட்சி பலத்தால், நியாயத்துக்கு ஆதரவு கொடுக்கும். அதைச் செய்வதுதான் நமது அறப்போரின் நோக்கம்.

0 0 0

கே: கண்ணதாசனுக்கு கவியரசர் என்று பட்டம் தந்திருக்கிறார்களே, உங்கள் அபிப்பிராயம் என்ன?

—க. மாணிக்கம்
முத்துப்பேட்டை

ப: ....

° ° °

கே: பண்டித நேரு பதவியை ராஜினாமா செய்வாரா?

—அ. சந்திரன்
காமேசுவரம்

ப: மக்கள் விரும்பினால் ராஜிநாமாசெய்யத் தயார்என்று அவரே கூறியுள்ளாரே!

"மக்களின் உயிர், மொழி, உடமை, உரிமை இவைகளைப் பாதுகாப்பதுதான் ஓர் அரசாங்கத்தின் இலட்சியமாக இருக்க வேண்டும்."

—அரசியல் கலைஞர்-லாக்

வெற்றி! வெற்றி! போடியில்!—என்று பூரிக்கின்றனர், காங்கிரசார்,

நாங்குனேரியில் நாங்களன்றோ பெற்றோம்!—என பெருமை பேசுகின்றனர்.

உண்மை! இரு இடங்களிலும்: வெற்றி!! அங்கெல்லாம் தி- மு. க. நேரடி போட்டியில்லை! ஆனால் திருவண்ணாமலையில் நாமும் காங்கிரசும்தான்!!

ஆளும்கட்சி - அதுவும் காமராசர் கட்சி பெற்றிருக்கும் அதிகார அம்புகள்.

பஞ்சாயத்து யூனியன் - கூட்டுறவு - அரிசன இலாகா - ஆகியவையின் செல்வாக்குச் சாதாரணமல்ல!

போடியிலும் நாங்குனேரியிலும் மந்திரிகள் வட்டாரமே எட்டுப் பேர் !- போட்டனர் முகாம்! மந்திரிகள் என்றால் மயங்குவர் யாரும், மிரளுவர் எவரும்!

இந்தச் சக்தியோடு பணபலமும் ஏராளம் காங்கிரசுக்கு! காமராசரின் 'நாணயம்' நன்றாகப் பேசும் அங்கு !

இத்தகைய -
கொடிய -
காங்கிரசை -
எதிர்க்கிறது தி. மு. க! நிற்கிறார் ப. உ. ச!
அவர்
வெல்ல,
நாம் ஒவ்வொருவரும் பத்து ஓட்டாவது கெஞ்சிக் கூத்தாடி மக்களிடம் சொல்லி உதயசூரியன் சின்னத்தில் விழுமாறு செய்ய வேண்டும்!
இது,
தன்மானப் பிரச்னை !
மறுபடி,
சந்திக்க முடியாது !
தாயக தி. மு. கழகத்தோரே !
ஏழையர் முகாமே !
ப. உ. ச. வெல்ல,

என்ன செய்தீர்? என்ன செய்யப் போகிறீர்?

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், 9-ஏ, சர். சி.பி. ராமசாமி ரோடு, அபிராமபுரம், சென்னை-18.
அச்சிட்டோர் : எம். பி. சத்தியமூர்த்தி, முல்லை அச்சகம், 3-40, மவுண்ட்ரோடு,சென்னை-6